بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدْ نَصَرَكُمُ اللهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 11

இதழ் 32

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரி 1448 - 22 ஸஃபர்

ஹிஜ்ரீ ஷம்ஸி 1405 - ஸஹுரீ 06 ★ ஆகஸ்ட் 06 2026


## அல்லாஹ்வின் கட்டளை

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اتَّقُوا اللهَ وَلْتَنْظُرْ نَفْسٌ مَّا قَدَّمَتْ لِغَدٍ ۚ وَاتَّقُوا اللهَ ۗ اِنَّ اللهَ خَبِيْرٌۢ بِمَا تَعْمَلُوْنَ ۔ وَلَا تَكُوْنُوْا كَالَّذِيْنَ نَسُوا اللهَ فَاَنْسٰهُمْ اَنْفُسَهُمْ ۗ اُولٰٓئِكَ هُمُ الْفٰسِقُوْنَ ۔

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். ஒவ்வோர் ஆன்மாவும் நாளைக்கென்று எதனை அனுப்பியுள்ளது என்பதை கவனத்திற் கொள்ள வேண்டும். மேலும், நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கறிகின்றான். (59:19)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## நபிமொழி

## ஒரு நபர் தீயவராக இருப்பதற்கு தம் முஸ்லிம் சகோதரரை இழிவாகக் கருதுவதே போதுமானதாகும்

عَنْ أَبِي هُرَيْرَةَ، قَالَ: قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: "لَا تَحَاسَدُوا، وَلَا تَنَاجَشُوا، وَلَا تَبَاغَضُوا، وَلَا تَدَابَرُوا، وَلَا يَبِعْ بَعْضُكُمْ عَلَى بَيْعِ بَعْضٍ، وَكُونُوا عِبَادَ اللهِ إِخْوَانًا الْمُسْلِمُ أَخُو الْمُسْلِمِ لَا يَظْلِمُهُ، وَلَا يَخْذُلُهُ، وَلَا يَحْقِرُهُ التَّقْوَى هَاهُنَا، وَيُشِيرُ إِلَى صَدْرِهِ ثَلَاثَ مَرَّاتٍ، بِحَسْبِ امْرِءٍ مِنَ الشَّرِّ أَنْ يَحْقِرَ أَخَاهُ الْمُسْلِمَ كُلُّ الْمُسْلِمِ عَلَى الْمُسْلِمِ، حَرَامٌ دَمُهُ، وَمَالُهُ، وَعِرْضُهُ".

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நீங்கள் ஒருவருக்கொருவர் பொறாமை கொள்ளாதீர்கள்; பரஸ்பரம் சண்டையிடாதீர்கள்; பரஸ்பரம் காழ்ப்புணர்ச்சி கொள்ளாதீர்கள்; மேலும் ஒருவருக்கொருவர் பகைமை பாராட்டாதீர்கள்; உங்களில் எவரும் மற்றவரின் வியாபாரத்தின் மீது வியாபாரம் செய்ய வேண்டாம்.

அல்லாஹ்வின் அடியார்களே! நீங்கள் ஒருவருக்கொருவர் சகோதரர்களாக ஆகிவிடுங்கள். ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் சகோதரர் ஆவார். அவர் தம் சகோதரருக்கு அநீதி இழைக்கமாட்டார்; அவரை கைவிடமாட்டார்; அவரை இழிவாகக் கருதமாட்டார்.

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூன்று முறை தம் இதயத்தை சுட்டிக்காட்டி, இறையச்சம் இங்கே இருக்கிறது; இறையச்சம் இங்கே இருக்கிறது; இறையச்சம் இங்கே இருக்கிறது' என்று கூறினார்கள்.

ஒரு நபர் தீயவராக இருப்பதற்கு, தம் முஸ்லிம் சகோதரரை இழிவாகக் கருதுவதே போதுமானதாகும். ஒரு முஸ்லிமிற்கு மற்றொரு முஸ்லிமின் இரத்தம், செல்வம் மற்றும் கண்ணியம் ஆகியவை தடுக்கப்பட்டவை ஆகும்.(ஸஹீஹ் முஸ்லிம்,ஹதீஸ் : 654) * * * * * *

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொன்மொழிகள்

## மனிதன் உலக ஆசைகளையும் இன்பங்களையுமே சொர்க்கம் என்று கருதுகிறான். ஆனால் அது நரகமாகும்

ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இஸ்லாத்தில் உண்மையான வாழ்வு ஒரு மரணத்தை விரும்புகிறது. அது கசப்பானதாகும். ஆனால், அந்தக் கசப்பை யார் ஏற்றுக் கொள்கிறாரோ? அவரே இறுதியில் உயிருள்ளவராக இருக்கின்றார். ஹதீஸில் வந்துள்ளது: மனிதன் உலக ஆசைகளையும், இன்பங்களையுமே சொர்க்கம் என்று கருதுகிறான். ஆனால், அது நரகமாகும். மேலும் நற்பேறு பெற்ற மனிதர் அல்லாஹ்வின் பாதையில் துன்பங்களை ஏற்றுக் கொள்கின்றார், அதுவே அவருக்குச் சொர்க்கமாக மாறுகிறது. உலகம் அழியக் கூடியதாகும்; மேலும், அனைவரும் இறப்பதற்காகவே பிறந்திருக்கின்றார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இறுதியில் ஒரு காலம் வருகிறது. அப்போது அனைத்து நண்பர்களும், தெரிந்தவர்களும், உற்றார் உறவினர்களும் பிரிந்து விடுகின்றனர். ஒருவர் எந்த அளவு ஆகுமற்ற மகிழ்ச்சிகளையும், இன்பங்களையும் நிம்மதியாக கருதினாரோ, அவை அந்த நேரத்தில் வெறுப்பின் வடிவில் தோன்றும். உண்மையான மகிழ்ச்சியான நிலையும், நிம்மதியும் இறையச்சம் இன்றி கிடைப்பதில்லை. இறையச்சத்தில் நிலைத்திருப்பது என்பது ஒருவகையில் விஷக் கோப்பையைக் குடிப்பது போன்றதாகும். இறையச்சமுடையவருக்கு அல்லாஹ் அனைத்து மகிழ்ச்சிகளுக்குமான ஏற்பாடுகளையும் அமைத்துத் தருகிறான்.

مَنْ يَّتَّقِ اللهَ يَجْعَلْ لَّهٗ مَخْرَجًا وَّيَرْزُقْهُ مِنْ حَيْثُ لَا يَحْتَسِبُ ۔

(சூரா அத்-தலாக்: 3-4)

எனவே, மகிழ்ச்சிகரமான நிலைக்கான அடிப்படைத் தத்துவம் இறையச்சம் ஆகும். ஆனால், இறையச்சத்தைப் பெறுவதற்காக நாம் நிபந்தனைகளை விதித்துக் கொண்டிருப்பது கூடாது. இறையச்சத்தைக் மேற்கொள்ளுங்கள்; நீங்கள் கேட்பதெல்லாம் கிடைக்கும். அல்லாஹ் மிகவும் கருணையாளனும், கொடையாளனும் ஆவான். இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள். நீங்கள் விரும்புவதை அவன் தருவான்.'

(மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 90 - பதிப்பு 2003, ரப்வா)

* * * * * * * * * * *

## முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் பொன்மொழிகள்

## தத்தகூன்

## என்பதன் ஒரு பொருள் என்னவென்றால் நீங்கள் இறை வணக்கத்தை மனத்தூய்மையுடனும் உறுதியான நம்பிக்கையுடனும் செய்தால் பரஸ்பர அநீதிகளிலிருந்தும் தப்பித்துக் கொள்வீர்கள் என்பதாகும்

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் அல்பக்கரா அத்தியாயத்தின் 22-வது வசனத்தின் விளக்கவுரையை வழங்கியவாறு கூறுகின்றார்கள்:

தத்தகூன் என்ற இந்த சொல்லில் எங்கு அல்லாஹ் மற்றும் அவனது அடியார்களுக்குமான தொடர்புகளை சீர்கெடுக்கக் கூடிய விவகாரங்களிலிருந்து தப்பித்தல் என்ற பொருள் இருக்கிறதோ அங்கு அடியார்களுக்கு இடையேயான பரஸ்பர உறவுகளோடு தொடர்புடைய தவறான விவகாரங்களிலிருந்து தப்பித்தல் என்ற பொருளும் இருக்கிறது. இறை வணக்கம் மனிதனை அத்தகைய விவகாரங்களில் தவறு செய்வதிலிருந்தும் காப்பாற்றுகிறது. எந்த நபர் அல்லாஹ்வைத் தமது ரப்பாக புரிந்து கொள்வாரோ, அவர் நிச்சயமாக அவனுடைய அடியார்களுடனும் நல்லுறவை உருவாக்கிக் கொள்வார் என்பது அவசியமாகும். மேலும், அவர் அடியார்கள் மீது அநீதி இழைக்க மாட்டார் என்பதும் அவசியமாகும். ஏனெனில், எந்த நபர் தம்மைத் தாமே அல்லாஹ்வின் அடியாராக ஆக்கிக் கொள்வாரோ அவரது பார்வை தமது அனைத்து தேவைகளுக்காகவும் குறிப்பாக, அவர் அல்லாஹ் தன்னுடைய ரப்பாக இருக்கிறான் என்பதில் ஈமான் கொண்டிருக்கும்போது வல்ல இறைவனின் மீதே அவரத பார்வை இருக்கும். எந்த நபர் அல்லாஹ்வை தனது அனைத்துத் தேவைகளுக்கும் பொறுப்பாளனாகக் கருதுவாரோ, அவர் அடியார்களின் செல்வத்தின் மீது தன் பார்வையைச் செலுத்தவும் மாட்டார். மேலும் தம் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக அவர்களின் செல்வங்களில் மோசடி செய்யவும் மாட்டார். மேலும், அவர்கள் மீது அநீதியும் இழைக்க மாட்டார். எனவே தத்தகூன் என்பதன் ஒரு பொருள் இதுவும் ஆகும். அதாவது, நீங்கள் இறைவனின் வழிபாட்டை மனத் தூய்மையுடனும், உறுதியான நம்பிக்கையுடனும் செய்தால், பரஸ்பர அநீதிகளிலிருந்தும் தப்பித்துக் கொள்வீர்கள்; மேலும் உலகிலும் அமைதியும் நிலவும்.

ஸஹாபா பெருமக்கள் தமது இறைவனின் அடியார்களாக மாறினார்கள். பாருங்கள்! அவர்களின் ஆட்சியில் உலகிற்கு எத்தகைய அமைதி கிடைத்தது என்றால், எதிரிகள் கூட அவர்களின் நன்நடத்தையை ஒப்புக்கொண்டார்கள். (தஃப்ஸீரே கபீர் 1, பக்கம் 302, ஆன்லைன் பதிப்பு)

* * * * * * * * * * *


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# வாழ்வின் அசல் நோக்கம் இறையச்சத்தை பெறுவதாகும் இரவும் பகலும் எப்படி ஒன்று சேர முடியாதோ அதுபோல ஈமானும் பாவமும் ஒன்றிணைய முடியாது

## 2019 -ம் ஆண்டு லண்டன் மாநாட்டில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நிகழ்த்திய துவக்க உரையின் சுருக்கம்

ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஆகஸ்ட் 2, 2019 -ம் ஆண்டு அருளுக்குரிய வெள்ளிக்கிழமையன்று அஹ்மதிய்யா ஜமாஅத் யூ.கே வின் ஆண்டு மாநாட்டின் துவக்க அமர்வில் உரை நிகழ்த்தினார்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மாநாட்டுத் திடலில் அஹ்மதிய்யத்தின் கொடியை ஏற்றி வைத்து துஆ செய்தார்கள். பிறகு, பிற்பகல் 4:37 மணியளவில் மாநாட்டுத் திடலுக்கு வருகை தந்து துவக்க அமர்விற்கு தலைமை தாங்கினார்கள். அதன் பிறகு நிகழ்ச்சிகள் முறையாக ஆரம்பமாகின. ராஷித் கத்தாப் ஸாஹிப் (கபாபீர்) அவர்களின் திருக்குர்ஆன் திலாவத்துடன் துவக்க அமர்வு தொடங்கியது. அவர் சூரா ஆலி இம்ரானின் 191 முதல் 196 வரையிலான வசனங்களை ஓதினார். அதைத் தொடர்ந்து நஸீர் அஹ்மது கமர் அவர்கள் அதன் உருது மொழிபெயர்ப்பை வாசித்து காட்டினார்.

அதன் பிறகு, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஃபார்சி கவிதையிலிருந்து சில வரிகளை ஸய்யிது ஆஷிக் ஹுஸைன் ஸாஹிப் அவர்களும், உருது கவிதைகளிலிருந்து சில வரிகளை முஸவ்விர் அஹ்மது ஸாஹிப் (ஆஸ்திரியா) அவர்களும் ராகத்துடன் பாடுவதற்கு நற்பேறு பெற்றனர்.

மாலை 5:05 மணிக்கு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மேடைக்கு வருகை தந்து, ஜல்ஸாவில் கலந்து கொண்டிருந்தவர்களுக்கும், மேலும் எம்.டி.ஏ மூலம் முழுஉலகிலும் உள்ள பார்வையாளர்களுக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காதஹு என்ற துஆவை வழங்கினார்கள்.மேலும் தமது துவக்க உரையைத் தொடங்கினார்கள்.

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹாவுக்குப் பிறகு, ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் சூரா ஆலி இம்ரானின் 194-வது வசனத்தை ஓதி அதன் பொருளைக் கூறினார்கள்.

அதன் பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ் தனது சிறப்பான அருளால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களை ஒப்புக் கொள்வதற்கு நமக்கு நற்பேறு வழங்கியுள்ளான் என்பதை அறிவிக்கவும், வெளிப்படுத்தவுமே நாம் இன்று இங்கு ஒன்றுகூடியுள்ளோம். அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைகளின்படி செயல்படுவதன் பக்கம் நமக்கு அன்னார் (அலை) கவனமூட்டினார்கள். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைகளை ஏற்பதன் மூலமாகவே நமது இம்மையையும், மறுமையையும் சீராக்கிக் கொள்ள முடியும்' என்று அன்னார் (அலை) தெளிவுபட கூறினார்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் சூரா ஆலி இம்ரானின் 194-வது வசனத்தைக் குறிப்பிட்டு, நம்முடைய செயல்கள் இந்த போதனைக்கு ஏற்ப இல்லையென்றால், பின்னர் நம்பிக்கை கொண்டிருப்பதாக நாம் புரியும் வாதம் முற்றிலும் வீணானதாகும் என்று கூறினார்கள்.

மேலும் ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:, 'நாம் நம்மை சுயபரிசோதனை செய்வது அவசியமாகும். உண்மையான ஈமானை உருவாக்குவதற்கு அல்லாஹ்வின் கட்டளைகளை நாம் தேடுவதற்கான அவசியம் உள்ளது. அதாவது, உண்மையான நம்பிக்கையாளருக்கு அவசியமான அந்த நிலைகளை நாம் நம்மிடம் உருவாக்கி விட்டோமா?' என்று நம்மை நாமே ஆய்வு செய்ய வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் நமக்கு முன்னால் வைத்துள்ள அந்தத் தரங்கள் என்ன? என்றும் நாம் ஆய்வு செய்ய வேண்டும்.

அதன் பிறகு, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மேற்கோள்களின் அடிப்படையில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஈமானின் உண்மைத்துவம் தொடர்பாக கூறினார்கள்:

அல்லாஹ்வின் இருப்பின் மீது உண்மையான ஈமான் இருந்தால், மனிதனால் பாவத்தின் பக்கம் செல்லவே முடியாது.

மேலும் கூறினார்கள்: மனித வாழ்வின் அசல் நோக்கம் இறையச்சத்தைப் பெறுவதாகும்; அதுவன்றி மனிதனால் பாவங்களிலிருந்து தப்பிக்கவே முடியாது.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பாவம் தொடர்பாக கூறினார்கள்:

மனிதன் தன்னைத் தனித்தவனாக கருதும்போதுதான் அவன் பாவத்தின் பக்கமே செல்கின்றான். தான் தனியாக இருக்கின்றேன் (எவரும் என்னைப் பார்க்கவில்லை) என்ற மனிதனின் இந்த சிந்தனையானது நாத்தீக எண்ணமாகும்.

இறையசத்தின் முக்கியத்துவம் குறித்து ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் விரிவாக ஒளிபாய்ச்சியவாறு கூறினார்கள்: திருக்குர்ஆன் இதிலிருந்தே தொடங்கியுள்ளது. அதாவது, 'திருக்குர்ஆனின் இரண்டாவது சூராவின் தொடக்கத்திலேயே 'ஹுதல்லில் முத்தகீன்' (இறையச்சமுடையோருக்கு வழிகாட்டி) என்ற வார்த்தைகள் வருகின்றன.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இறையச்சத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தவாறு மேலும் கூறினார்கள்:

இதை விட பெரிய வெற்றி வேறு எதுவும் இல்லை. அதாவது, இன்றைய காலத்தில் இறையச்சம் மிகவும் அவசியமாகும். இறையச்சத்தை நிலைநிறுத்துவதற்காகவே அல்லாஹ்வின் நபிமார்கள் உலகில் தோன்றுகின்றார்கள். மேலும், இக்காலத்தில் அதனைப் பெறுவதன் பக்கம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கவனமூட்டியுள்ளார்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

இறையச்சமுடையவருக்கு மட்டுமே இரட்சிப்பு கிடைக்க முடியும். மேலும், அதன் மூலம் அவருக்கு எதிர்பாராத இடத்திலிருந்து ரிஸ்க் கிடைக்கின்றது. இதேபோன்று ஹதீஸில் வருகின்றது: இறைவன் இறையச்சமுடையவரின் நண்பனாகி விடுகின்றான்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் ஐவேளை தொழுகையை பேணுவது தொடர்பாக கூறினார்கள்:

ஒவ்வொருவரின் மீதும் தினமும் ஐவேளை தொழுகை என்பது கடமையாகும். மேலும் அதன் மூலம் அல்லாஹ்வின் அன்பும், மகத்துவத்துவமும் அதிகரிக்கும்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்த விஷயத்தின் பக்கமும் கவனமூட்டினார்கள். அதாவது, உண்மையான ஈமான் என்பது என்னவென்றால், அனைத்துத் தேவைகளையும் அல்லாஹ்வின் முன்னால் வைத்து விட வேண்டும். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் எடுத்துரைத்துள்ள ஈமானின் ஓர் அழகிய உதாரணத்தை அன்னார் எடுத்துரைத்தார்கள். கூறினார்கள்:

பகலும், இரவும் ஒன்று சேரமுடியாதது போன்று ஈமானும், பாவமும் ஒன்றிணைய முடியாது.

இந்த உரையில் ஹுஸூர் அன்வர் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வழிகாட்டல்களின் ஒளியில் பைஅத்தின் உண்மைத்துவத்தையும் எடுத்துரைத்தார்கள். பைஅத் செய்து விடுவதை மட்டும் நம்பி அமர்ந்து விடக் கூடாது; அசல் நோக்கத்தை பெற்று விடாத வரை இரட்சிப்பு கிடைக்க முடியாது. ஒரு மனிதன் சுயமே அமல் செய்பவனாக இல்லாமல் இருந்தால் பின்னர் பைஅத்தினால் எந்த பயனும் விளையாது.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நற்செயல்கள் மற்றும் இஸ்திஃக்ஃபார் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஞானம் நிறைந்த மேற்கோள்களை எடுத்துரைத்தார்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் திருக்குர்ஆனின் முக்கியத்துவத்தை ஜமாஅத் உறுப்பினர்களுக்கு எடுத்துரைத்தவாறு கூறினார்கள்: திருக்குர்ஆனை கற்பனைக் கதைகளைப் போன்று படிக்கக் கூடாது; மாறாக, திருக்குர்ஆன் ஓர் ஒளியாகும், ஓர் உயிருள்ள மற்றும் ஒளிமயமான வேதமாகும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மேன்மை பொருந்திய சொற்களுடன் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மகத்துவத்தை குறிப்பிட்டுக் கூறினார்கள். மேலும், இதன் பக்கம் கவனமூட்டினார்கள். அதாவது, அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணையக் கூடிய நபர்களின் வாழ்க்கை பாமர உலகவாதிகளின் வாழ்வைப் போன்று இருத்தல் கூடாது. மேலும், ஜமாஅத்தில் இணைந்திருக்கின்றோம்; எனவே அமல் செய்வதற்கு அவசியம் இல்லை என்று கூறுவது மிகவும் மோசமான நிலையாகும். அல்லாஹ் அத்தகைய நபரை விரும்புவதில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தமது ஜமாஅத்தைச் சார்ந்த நபர்களுக்கு வழங்கிய அறிவுரைகளிலிருந்து சிலவற்றை ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் எடுத்துரைத்தார்கள்; அவை பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகின்றன:

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

என்னுடன் தொடர்பு வைத்துள்ளீர்கள் என்றால் பின்னர் எனது நோக்கங்களை நிறைவேற்றுங்கள்.

உங்களது செயல்களால் நீங்கள் உண்மையாளர்களின் கூட்டத்தைச் சார்ந்தவர்கள் ஆவீர்கள் என்பதை நிரூபணம் செய்யுங்கள்.

புதிய வாழ்க்கையைக் கழிக்கக் கூடிய மனிதராக ஆகிவிடுங்கள்.

உரையின் நிறைவாக ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் முழு உலகத்திற்காகவும், முஸ்லிம் சமுதாயத்திற்காகவும் துஆ செய்யும்படி அறிவுரை நல்கியவாறு கூறினார்கள்: இந்த நாட்களில் குறிப்பாக உலகத்திற்காகவும், முஸ்லிம் சமுதாயத்திற்காகவும் துஆ செய்யுங்கள். உலகம் போரின் பக்கம் முன்னேறிக் கொண்டிருக்கிறது. அல்லாஹ் அதனை காப்பாற்றுவானாக! மேலும், நாம் இஸ்லாத்தின் கொடியை உலகில் பறக்க விடக் கூடியவர்களாக திகழ்வோமாக!

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் இந்த உரை 6:12 மணிக்கு நிறைவுற்றது. அதன் பிறகு கூட்டுத் துஆ உடன் இந்தத் துவக்க அமர்வு நிறைவடைந்தது.

அல்லாஹ் நம் அனைவருக்கும் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் வழிகாட்டுதல்களை புரிவதற்கும், அதன்படி அமல் செய்வதற்கும் நற்பேறு வழங்குவானாக! ஆமீன்!

(நன்றி: அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் பத்திரிகை)

* * * * * * * * * * *

## ஜுமுஆ பேருரை

# ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நிகரற்ற கொடையும் தாராள குணமும்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 19 ஜூன் 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **19 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ ۝ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝

صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கொடைத்தன்மை மற்றும் தாராள குணம் குறித்து தற்போது சில அறிவிப்புகளைச் சமர்ப்பிக்கிறேன். ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அபூ ஸயீத் குத்ரீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

அன்ஸாரிகளில் சிலர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் (செல்வம்) கேட்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவர்களுக்குக் கொடுத்து விட்டார்கள். மீண்டும் அவர்கள் கேட்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் கொடுத்தார்கள். மீண்டும் அவர்கள் கேட்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவர்களுக்கு கொடுத்தார்கள். எந்த அளவிற்கு என்றால், அன்னாரிடம் இருந்த அனைத்தும் தீர்ந்து விட்டன. பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

என்னிடத்தில் இருக்கும் எந்தச் செல்வத்தையும் நான் உங்களுக்குத் தராமல் ஒருபோதும் மறைத்து வைக்க மாட்டேன். மேலும், எவர் (பிறரிடம்) கேட்பதிலிருந்து தற்காத்துக் கொள்கிறாரோ, அல்லாஹ்வும் அவரை பாதுகாப்பான்.

அத்துடன் பிறரிடம் கேட்கக் கூடாது என்ற அறிவுரையையும் வழங்கினார்கள். மேலும், எவர் உலகச் செல்வங்களிலிருந்து தன்னிறைவு பெற்றவராக இருக்க விரும்புகிறாரோ, அல்லாஹ்வும் அவரைத் தன்னிறைவு பெற்றவராக ஆக்கி விடுவான். மேலும், எவர் தன் மனதைக் கட்டுப்படுத்திப் பொறுமையைக் கடைப்பிடிக்க முயல்கிறாரோ, அல்லாஹ்வும் அவருக்குப் பொறுமையை அருளுவான். பொறுமையை விடப் பரந்த, சிறந்த எந்தவொரு அருட்கொடையும் எவருக்கும் வழங்கப்படவில்லை. (ஸஹீஹ் அல்புஹாரி, ஸக்காத் பற்றிய அத்தியாயம், பிறரிடம் கேட்பதிலிருந்து தற்காத்துக் கொள்ளுதல் பற்றிய பாடம், ஹதீஸ்: 1469, தொகுதி: 3, பக்கம்: 110)

சில சிரமங்கள், துன்பங்கள் மற்றும் தேவைகளின் போது பொறுமையைக் கடைப்பிடிப்பதும் அவசியமாக உள்ளது. அல்லாஹ் அதற்கு அருளுகின்றான்.

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் நாங்கள் ஒரு பயணத்தில் இருந்தோம். நான் என் தந்தை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்குச் சொந்தமான, அடக்க முடியாத ஓர் இளம் ஒட்டகத்தின் மீது சவாரி செய்து கொண்டிருந்தேன். அது என் கட்டுப்பாட்டில் இல்லாமல் மக்களை முந்திச் சென்று கொண்டிருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதனை அதட்டினார்கள். மேலும் அந்த ஒட்டகத்தின் மீது கடுமை காட்டினார்கள்; தடுத்து நிறுத்தினார்கள்; மேலும் அதற்கு குரல் கொடுத்தார்கள்; மேலும் பின்னுக்குத் தள்ளினார்கள்.

எவ்வாறிருப்பினும், ஒட்டகங்களை ஓட்டுவதற்கு என்ன வழிமுறை பயன்படுத்தப்படுமோ அதற்கு ஏற்ப செய்து அதனிடம் கூறினார்கள்; மேலும் அந்த ஒட்டகத்தைப் பின்னுக்குத் தள்ளினார்கள். ஆனால், அது மீண்டும் மக்களை முந்திச் சென்று விடும்; ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதனை அதட்டுவார்கள். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீதான கண்ணியத்தின் காரணமாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட எந்தவொரு ஒட்டகமோ அல்லது சவாரியோ முந்திச் செல்லக் கூடாது என்பதற்காக அதனை அதட்டி பின்னுக்குத் தள்ளினார்கள். ஏனெனில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாகனத்தை விட வேறு எவருடைய வாகனமும் முந்திச் செல்வதை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

எனவே இதைக் கண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், 'இந்த ஒட்டகத்தை எனக்கு விலைக்கு விற்றுவிடுங்கள்' என்று கூறினார்கள். அதற்கு, 'இறைத் தூதர் (ஸல்) அவர்களே! இது தங்களுக்கே சொந்தம்' என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.இதை எனக்கு விற்றுவிடுங்கள்' என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். எனவே அன்னார் (ரலி), அதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கரங்களில் விற்று விட்டார்கள். பின்னர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'அப்துல்லாஹ் பின் உமரே! இந்த ஒட்டகம் இனி உம்முடையதாகும்; இதை வைத்து நீர் என்ன விரும்புகிறாயோ அதைச் செய்து கொள்! என்று கூறினார்கள். (ஸஹீஹ் புஹாரி, பாப் இதா இஷ்தரா ஷைஅன்... ஹதீஸ் எண்: 2115, பாகம்: 4, பக்கம்: 86)

அன்பளிப்பு வழங்குவதிலும் இது ஒரு விசித்திரமான பாணியாகும். ஒட்டகமோ ஒரு விலங்காகும்; அது தானாக இவ்வாறு முந்திச் சென்று விட்டால் அதில் எந்தத் தவறும் இல்லை; 'இப்போது இந்த ஒட்டகம் என் தரப்பிலிருந்து அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது; இனி இது மற்ற வாகனங்களை விட முந்திச் சென்றாலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட ஒட்டகம் தான் முந்திச் சென்றது' என்றே கூறப்படும்' என்பதை அன்னார் (ஸல்) தெளிவுபடுத்தி விட்டார்கள்.

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் நான் ஒரு போரில் பங்கெடுத்திருந்தேன். என் ஒட்டகத்தின் வேகம் குறைந்து, அது களைப்படைந்துவிட்டது. அப்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம் வந்து, ஜாபிரே! என்று கூறினார்கள். அப்போது, ஆம்! இறைத் தூதர் (ஸல்) அவர்களே! என்று நான் கூறினேன். 'உமது நிலை என்ன? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள்.அதற்கு, ஒட்டகம் நடப்பதில் சோம்பலாகி விட்டது; மேலும் களைத்துப் போய்விட்டது; அதனால் தான் நான் பின் தங்கிவிட்டேன்' என்று நான் கூறினேன். அப்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது வாகனத்திலிருந்து இறங்கி தமது பிரம்பால் எனது ஒட்டகத்தை தட்டினார்கள்; பிறகு, சவாரி செய்து கொள்ளுங்கள் என்று கூறினார்கள். நான் அதில் சவாரி செய்தேன். அப்போது நான் கண்டேன்; அது எவ்வளவு வேகமாக சென்றது என்றால், அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாகனத்தை விடவும் வேகமாக முந்திச் சென்றது; அப்போது அதனை நான் கட்டுப்படுத்த வேண்டியதாயிற்று. பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'நீர் திருமணம் செய்து விட்டீரா? என்று என்னிடத்தில் கேட்டார்கள். ஆம்! என்று நான் பதிலளித்தேன். அதன் பிறகு அன்னார் (ஸல்) கூறினார்கள்:

பாருங்கள்! நீர் உமது குடும்பத்தை அடையும் நிலைக்கு வந்து விட்டீர்; நீர் வீட்டிற்குச் சென்றடைந்ததும் புத்திசாலித்தனத்துடனும், எச்சரிக்கையுடனும் நடந்துகொள்ளும். குடும்பத்தினருடன் அழகிய முறையில் நடக்க வேண்டும்.

பிறகு, உமது இந்த ஒட்டகத்தை எனக்கு விற்பனை செய்வீரா? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். நான் 'ஆம்!

என்றேன். அன்னார் (ஸல்) என்னிடமிருந்து அதை ஓர் ஊகியா வெள்ளிக்கு வாங்கிக் கொண்டார்கள். பிறகு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எனக்கு முன்பாகவே மதீனாவைச் சென்றடைந்து விட்டார்கள். நான் மறுநாள் காலையில் சென்றடைந்தேன். நாங்கள் பள்ளிவாசலுக்கு வந்தபோது, அன்னார் (ஸல்) பள்ளிவாசலின் வாசலில் இருப்பதை நான் கண்டேன். 'இப்போதுதான் வந்தீர்களா?என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். நான் ஆம்! என்றேன். 'உமது ஒட்டகத்தை விட்டுவிட்டு, பள்ளிவாசலுக்குள் சென்று இரண்டு ரக்அத்துகள் தொழுவீராக! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். எனவே நான் உள்ளே சென்று தொழுதேன்.

பின்னர், 'இவருக்கு ஒரு ஊகியா வெள்ளியை நிறுத்துக் கொடுங்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களிடம் கூறினார்கள். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் எனக்கு நிறுத்துக் கொடுத்து விட்டார்கள்; எடைபோடும்போது, தராசைச் சற்று சாய்த்து விட்டார்கள். அதாவது அதை விட சற்று அதிகம் கொடுத்தார்கள். பிறகு நான் திரும்பிச் சென்று விட்டேன். அப்போது, 'ஜாபிரை என்னிடம் அழைத்து வாருங்கள்! என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். தற்போது அன்னார் (ஸல்) எனது ஒட்டகத்தை திருப்பிக் கொடுத்துவிடுவார்கள் போல என்று நான் மனதில் கூறினேன். அன்னார் (ஸல்) அதனை விலைக்கு வாங்கி, எனக்கு திருப்பிக் கொடுத்து விடும் நிலையில் நான் மேற்கொள்ளும் இந்தத் திரும்பும் பயணத்தை விட எனக்கு விருப்பமற்ற விஷயம் வேறு எதுவும் இல்லை' என்று மனதில் கூறினேன். அப்போது, உமது ஒட்டகத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்; மேலும், அதன் பணமும் உமக்குரியதாகும் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். (ஸஹீஹ் புஹாரி - ஹதீஸ்: 2097, தொகுதி 4, பக்கம் 66 முதல் 68 வரை)

மற்றோர் அறிவிப்பில் இவ்வாறும் உள்ளது. ஹஸ்ரத் ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

இதற்குப் பிறகு நான் ஓர் யூதரின் பக்கமாக கடந்து சென்றேன். நான் இந்த முழு சம்பவத்தையும் அவரிடம் கூறியபோது, 'என்ன! அவர் உமக்கு ஒட்டகத்தின் பணத்தையும் கொடுத்துவிட்டு, ஒட்டகத்தையும் உமக்கே திருப்பிக் கொடுத்துவிட்டாரா?' என்று அவர் மிகவும் ஆச்சரியத்துடன் கேட்டார். நான் 'ஆம்! அப்படித்தான்' என்று கூறினேன்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் 'நபி (ஸல்) அவர்கள் தரப்பில் இருந்து அளிக்கப்பட்ட அந்த அன்பளிப்பில் எவ்வளவு பரக்கத் ஏற்பட்டது என்றால், அந்த ஒட்டகம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலம், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலம் மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலம் வரை உயிரோடு இருந்தது.'

(நஜாஹுல் காரி ஷரஹ் ஸஹீஹ் புஹாரி தொகுதி 16, பக்கம் 22,தொகுதி 16, பக்கம் 34-35)

அன்னாரின் முன்மாதிரி, அன்னாரின் தர்பியத், அன்னாரின் பரிசுத்த ஆற்றல் ஆகியவற்றின் தாக்கம் அனைத்து ஸஹாபிகள் மீதும் ஏற்பட்டிருந்தது. ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் மீதும் இதன் தாக்கம் இருந்தது. இதனால்தான், வறுமை ஏற்படும் என்ற எந்த அச்சமுமின்றி, அன்னார் (ரலி) தமது செல்வத்தை அன்னாரிடம் ஒப்படைத்து விட்டார்கள்.

ஆக, அறிவிக்கப்படுகிறது: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களிடம் வந்தார்கள். மேலும், அன்னார் (ஸல்) சற்று கவலையுடன் இருந்தார்கள். 'என்ன நடந்தது?' என்று ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் அன்னாரிடம் கேட்டார்கள். இது பஞ்சத்தின் காலமாகும்; உம்மைக் குறித்து எனக்கு வெட்கம் ஏற்படுகிறது. அதாவது, நான் உமது செல்வத்தை செலவழித்தால் உமது செல்வம் தீர்ந்துவிடும்; ஒருவேளை நான் செலவழிக்கவில்லையென்றால், நான் அல்லாஹ்வுக்கு அஞ்சுகிறேன் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அப்போது, ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் குறைஷிகளை அழைத்தார்கள்; அவர்களில் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களும் இருந்தார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் தீனார்களை வெளியில் எடுத்து அவற்றைக் குவித்து வைத்தார்கள். எந்தளவுக்கு என்றால், செல்வத்தின் மிகுதியின் காரணமாக எனக்கு எதிரே யார் அமர்ந்திருக்கிறார்கள்? என்பதைக் கூட என்னால் பார்க்க முடியவில்லை. பின்னர் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் சாட்சியாக இருங்கள்; இந்தச் செல்வம் அனைத்தும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடையதாகும்; அன்னார் (ஸல்) விரும்பினால் அதனை செலவு செய்வார்கள்; அவர்கள் விரும்பினால் அதனை தம்மிடமே வைத்துக் கொள்வார்கள். அன்னாரின் கவலையைப் போக்குவதற்காக, ஆம்! தாங்கள் இதைச் செலவிடுங்கள்!' என்று அன்னார் (ரலி) கொடுத்து விட்டார்கள். (தஃப்ஸீர் கபீர் இமாம் ராஸீ, பாகம் 16, ஜுஸ்ஃ 31-32, பக்கம் 198, சூரத்துல் ளுஹா வசனம் 8-ன் விரிவுரை, தாருல் குதுபில் இல்மிய்யா பெய்ரூத் 2004)

ஹஸ்ரத் உமர் இப்னு கத்தாப் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது: ஒரு நபர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து, ஏதேனும் தருமாறு கேட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'இப்போது என்னிடம் எதுவும் இல்லை;நீங்கள் என் பெயரில் உங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொள்ளுங்கள்; என்னிடம் ஏதேனும் வரும்போது, நான் அதற்கான தொகையைச் செலுத்திவிடுகிறேன் என்று கூறினார்கள்.

அப்போது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் ஏற்கனவே அவருக்கு வழங்கிவிட்டீர்கள்; தங்களின் சக்திக்கு அப்பாற்பட்ட விஷயத்திற்கு அல்லாஹ் தங்களைப் பொறுப்பாக்கவில்லை என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அப்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கூற்றை விரும்பவில்லை.

> **திருக்குர்ஆனிலிருந்து...**
>
> நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)
>
> A. Nasir Ahmad
> (District Ameer, Melapalayam)

அப்போது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் தாராளமாகச் செலவிடுங்கள்; அர்ஷின் அதிபதியான அல்லாஹ்விடமிருந்து வறுமை ஏற்படும் என்று அஞ்சாதீர்கள்!' என்று அன்ஸாரிகளில் ஒரு நபர் கூறினார். அந்த அன்ஸாரியின் இந்தக் கூற்றைக் கேட்டு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் புன்னகைத்தார்கள், அன்னாரின் முகத்தில் மகிழ்ச்சி வெளிப்பட துவங்கியது. பிறகு, 'எனக்கு இதுவே கட்டளையிடப்பட்டுள்ளது' என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். (ஷமாயிலுன் நபி (ஸல்), பக்கம் 148-149, பாப் மா ஜாஅ ஃபீ குல்கி ரஸூலில்லாஹ் (ஸல்), ஹதீஸ் 340, நூர் பவுண்டேஷன் ரப்வா)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் இவ்வாறு கூறிவந்தார்கள்:

அஹ்லுஸ் ஸுஃப்பா (எனும் திண்ணைத் தோழர்கள்) முஸ்லிம்களின் விருந்தினர்களாக இருந்தார்கள். சென்று ஓய்வெடுப்பதற்கு அவர்களுக்கு வீடோ, குடும்பமோ இருக்கவில்லை. மேலும் ஒருவரிடம் சென்று தங்குவதற்கு அவர்களுக்கு (உறவுகள்) யாரும் இருக்கவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஏதேனும் ஸதகா வந்தால், அன்னார் (ஸல்) அதனை அவர்களுக்கு அனுப்பிவைத்து விடுவார்கள்; அதிலிருந்து தாம் எதையும் எடுத்துக்கொள்ள மாட்டார்கள்.

பொதுவாக, அன்னாருக்கு ஸதகா ஹராம் என்பதால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எடுத்துக் கொள்வதில்லை; அது மற்றவர்களுக்கும், ஏழைகளுக்கும் உரியதாக இருந்தது. ஆனால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் ஏதேனும் அன்பளிப்பு வந்தால்,அன்னார் (ஸல்) அஹ்லுஸ் ஸுஃப்பா (எனும் திண்ணைத் தோழர்களை) அழைப்பார்கள். மேலும் அன்பளிப்பு ஏதேனும் வரும்போது அதிலிருந்து தாமும் சிறிது எடுத்துக் கொள்வார்கள்; மேலும், அதிலிருந்து அவர்களுக்கும் கொடுப்பார்கள். (ஸஹீஹ் புகாரி, கிதாப் அல்-ரிக்வாக், ஹதீஸ் எண்: 6452, தொகுதி: 15, பக்கம்: 222, நஷ்ர் வ இஷாஅத் பதிப்பகம்)

கொடைத் தன்மையுடன் அன்னாரின் இரக்கமும், நற்பயிற்சியும் உயர்ந்த தரத்தில் இருந்தது.

இது குறித்து ஓர் அறிவிப்பில் வருகிறது: ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒருமுறை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் ஒரு கிராமவாசி வந்து, தமது தேவைகள் தொடர்பாக யாசித்தார்.

அறிவிப்பாளர் இக்ரிமா ஆவார்: கூறுகின்றார்: எனது எண்ணப்படி அவர் (தீத் எனும்) கொலைக்கான நஷ்டஈடு வழக்கில் உதவி கேட்பதற்காக வந்திருந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்குச் சிலவற்றை வழங்கினார்கள். பிறகு, நான் உம்மிடம் நல்லமுறையில் நடந்து கொண்டேனா?' என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அதற்கு அந்த கிராமவாசி 'இல்லை! தாங்கள் என்னிடம் நல்லமுறையில் நடக்கவில்லை' என்று கூறினார். இதைக் கேட்டு சில முஸ்லிம்கள் கோபமடைந்து, அவர் மீது பாய்வதற்கும், அவரைப் பிடிப்பதற்கும் எண்ணம் கொண்டனர். அப்போது, ஹஸ்ரத் நபிகள்

நாயகம் (ஸல்) அவர்கள் சைகையால் அவர்களைத் தடுத்து விட்டார்கள்.

பிறகு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எழுந்து வீட்டிற்குச் சென்று விட்டார்கள். மேலும், அந்த கிராமவாசியை வீட்டிற்கு அழைத்தார்கள். மேலும், நீர் எம்மிடம் வந்தீர்; எம்மிடம் (செல்வம்) கேட்டீர்; நாமும் உமக்குக் கொடுத்தோம்; ஆயினும் நீர் கூறியதை கூறிவிட்டீர். அதாவது நான் உமக்கு நீதம் செய்யவில்லை என்று கூறியுள்ளீர். பிறகு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வீட்டிலிருந்து அவருக்கு மேலும் அதிகமாகக் கொடுத்தார்கள். பிறகு, இப்போது நான் உன்னிடம் நல்லமுறையில் நடந்து கொண்டேனா?' என்று கேட்டார்கள். அதற்கு, 'ஆம்! அல்லாஹ் உங்களுக்கும், உங்கள் வீட்டாருக்கும், உங்கள் குலத்தாருக்கும் சிறந்த கூலியை வழங்குவானாக!' என்று அந்த கிராமவாசி கூறினார்.

அப்போது,ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீர் எம்மிடம் வந்தீர்; (செல்வம்) கேட்டீர்; நாமும் கொடுத்தோம். ஆனால் உம் மனதில் தோன்றியதை சிந்திக்காமல் நீர் கூறிவிட்டீர்; இதனால் எனது ஸஹாபிகளின் உள்ளத்தில் உன்னைப் பற்றிச் சில கோபம் காணப்படுகிறது. எனவே, இப்போது நீர் வெளியே வரும்போது, என் முன்னே நீர் கூறியதை அவர்கள் முன்னிலையிலும் கூறிவிடுவீராக; அப்போதுதான் அவர்களின் நெஞ்சங்களில் இருக்கும் கோபம் நீங்கும். அதாவது, அன்னார்(ஸல்) நீதியுடன் நடந்து கொண்டார்கள்' என்று அவர் அப்போது கூறினார்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: அந்த கிராமவாசி வந்தபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களின் இந்தத் தோழர் எம்மிடம் வந்தார்; அவர் எம்மிடம் (செல்வம்) கேட்டார்; நாமும் அவருக்குக் கொடுத்தோம்; அவர் தன் மனதில் தோன்றியதைக் கூறிவிட்டார்; நாம் அவரை அழைத்து மேலும் கொடுத்தோம்; இப்போது, தாம் திருப்தி அடைந்துவிட்டதாக அவர் கூறுகின்றார். அப்படித்தானே?' என்று கேட்டார்கள். அதற்கு, அந்த கிராமவாசி, 'ஆம்! அல்லாஹ் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தாருக்கும், தங்கள் குலத்தாருக்கும் நற்கூலியை வழங்குவானாக!' என்று பதிலளித்தார்.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

அப்போது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என்னுடைய மற்றும் இந்த கிராமவாசியுடைய உதாரணம் அந்த ஒரு நபரைப் போன்றதாகும். அதாவது, ஒருவரிடம் ஓர் ஒட்டகம் இருந்தது, அது திடீரென பாய்ந்து ஓடி விடுகின்றது; மேலும் மக்கள் அதனை பின்தொடர்ந்து ஓடுகின்றனர்; அதனால் அந்த ஒட்டகம் இன்னும் வேகமாக ஓடுகின்றது; அந்நிலையில் அந்த ஒட்டகத்தின் எஜமானர் கூறுகின்றார்: என்னையும், எனது ஒட்டகத்தையும் விட்டு விடுங்கள்; ஏனெனில் நான் அதனுடன் அதிகம் மென்மையுடன் நடந்து கொள்ளக் கூடியவன் ஆவேன்; மேலும் ஒட்டகத்தை எப்படி பிடிக்க வேண்டும் என்று அதைக் குறித்து நான் அதிகம் அறிந்துள்ளேன்; நீங்கள் அதன் பின்னால் ஓடினால் அது மேலும் விரைவாக ஓடும்.

பின்னர், ஒட்டகத்தின் எஜமானர் அதன் பக்கம் கவனம் செலுத்தினார்; மேலும் அதற்காக சிறிது புல்லை எடுத்துக் கொண்டு தம் பக்கம் அழைத்தார். கைகளில் புல்லை ஏந்திக் கொண்டு ஒட்டகத்தின் பக்கம் கவனம் செலுத்தினார். எந்த அளவிற்கு என்றால், அது அவர் பக்கம் வந்து, அதன் மீது ஒட்டகச் சேணம் அமைத்து சவாரி செய்யும் அளவில் அவர் கவனம் செலுத்தினார். அன்னார் (ஸல்) கூறினார்கள்: புல்லை உண்பதன் பக்கம் ஒட்டக் வருகின்றது. அது அதைப் பார்த்தே வரும்; மேலும் அருகில் வந்த உடன் அவர் அதன் மீது ஒட்டகச் சேணத்தை வைத்து விடுகிறார். அன்னார் (ஸல்) கூறினார்கள்: புல்லை உண்பதன் பக்கம் ஒட்டகம் வருகின்றது. அது அதைப் பார்த்து வரும். அது அருகில் வந்த உடன் அதன் மீது அவர் அமரும் இருக்கையை அமைத்து விடுவார்.

அடுத்து அன்னார் (ஸல்) கூறினார்கள்: இந்த கிராமவாசி கடுமையான வார்த்தைகளைப் பேசிய அந்த நேரத்தில், நான் உங்களது கூற்றை ஏற்றுக் கொண்டிருந்தால் மேலும் அவர் மீது கடுமை காட்டியிருந்தால் பின்னர் அவர் நெருப்பில் நுழைந்து இருப்பார். ஆனால், நான் அவரை காப்பாற்றி விட்டேன். மேலும் தற்போது அவரும் மகிழ்ச்சியடைந்து விட்டார். (மஜ்மஉஸ் ஸவாயித், தொகுதி 8, பக்கம் 413 - 414, ஹதீஸ் எண்: 14193, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2001-ம் ஆண்டு)

இது அன்னாரின் கொடைத் தன்மையின் தொனியாக இருந்தது. வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். அன்னார் (ஸல்) வெளியில் கொண்டு வந்து கூட கொடுத்திருக்கலாம்; ஆனால், பாருங்கள்! எனது வீட்டில் ஆடம்பரமான எந்தப் பொருட்களும் இல்லை ; என்னிடத்தில் என்ன இருந்ததோ அதனை கொடுத்து விட்டேன் என்று காட்டி விட்டார்கள். அந்த கிராமவாசியும் திருப்தி அடைந்து விட்டார்.

ஹஸ்ரத் ருபைய்யிஃ பின்த் முஆவ்விஸ் பின் அஃப்ராஃ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

எனது தந்தையார் மஅவூஸ் பின் அஃப்ராஃ அவர்கள் என்னிடம் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஒரு ஸாஃ அளவு பேரீத்தம் பழங்களைக் கொடுத்து அனுப்பினார்கள்; அதன் மேலும் சிறிய, சிறிய வெள்ளரிக்காய்களை வைத்திருந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு வெள்ளரிக்காய் மிகவும் விருப்பமானதாக இருந்தது. அதே நேரம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பஹ்ரைனில் இருந்து நகைகள் வந்திருந்தன. அன்னார் (ஸல்) அந்த நகைகளில் இருந்து தமது ஓர் உள்ளங்கை நிறைய எடுத்து எனக்கு நல்கினார்கள்.

மற்றோர் அறிவிப்பில் உள்ளது. இறைத் தூதர் (ஸல்) அவர்கள் எனக்கு எனது ஓர் உள்ளங்கை நிறைய ஆபரணங்கள் நல்கினார்கள்; பின்னர் இதனை அணிந்து கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

பேரீச்சம்பழங்கள் மற்றும் வெள்ளரிக் காய்களுக்குப் பதிலாக ஆபரணங்களை அன்னார் (ஸல்) வழங்கிவிட்டார்கள்; இது மிக அழகிய முறையில் திருப்பிக் கொடுப்பதாகும்.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்களிடமிருந்து அறிவிப்பு உள்ளது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் கடனாளியாக இருக்கும் ஒருவரின் ஜனாஸா கொண்டு வரப்பட்டால், 'இவர் தனது கடனை அடைப்பதற்காக ஏதேனும் சொத்து விட்டுச் சென்றுள்ளாரா?' என்று கேட்பார்கள். மக்கள் 'ஆம்! என்று கூறினால், அவருக்கு ஜனாஸா தொழுகை நடத்துவார்கள். இல்லையெனில், முஸ்லிம்களை நோக்கி 'உங்கள் தோழருக்கு நீங்களே ஜனாஸா தொழுகை நடத்துங்கள்' என்று கூறிவிடுவார்கள். ஆனால், அல்லாஹ் நபியவர்களுக்கு வெற்றிகளைத் தந்தபோது அன்னார் (ஸல்) கூறினார்கள்:

நான் முஸ்லிம்களுக்கு அவர்களின் உறவினர்களை விடவும் மிக நெருக்கமானவன் ஆவேன்; எனவே, நம்பிக்கையாளர்களில் யாராவது மரணித்து, அவர் கடனை விட்டுச் சென்றால், அதனை செலுத்துவது எனது பொறுப்பாகும். மேலும் ஒருவர் செல்வத்தை விட்டுச் சென்றால், பின்னர் அது அவருடைய வாரிசுகளின் பொறுப்பாகும். (ஸஹீஹ் புஹாரி, கிதாபுல் கஃபாலா, பாப் அத்தீன், ஹதீஸ்: 2298, பாகம் 4, பக்கம் 280)

கடன் இருந்தால் அதை நான் அடைப்பேன். ஆனால், அவர் செல்வத்தை விட்டுச் சென்றால், பின்னர் அது அவருடைய வாரிசுகளுடையதாகும்.

அப்துல்லாஹ் ஹவ்ஸனீ (ரஹ்) கூறுகிறார்: நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் முஅத்தினாக இருந்த ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களை 'ஹலப்' என்னும் இடத்தில் சந்தித்தேன். நான் அவர்களிடம், 'பிலாலே! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் செலவுகள் எவ்வாறு அமைந்திருந்தன? என்பதைப் பற்றி எனக்குக் கூறுங்கள்! என்று கேட்டேன். அதற்கு அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் எதுவும் இருந்ததில்லை. நானே அன்னார் (ஸல்) சார்பாக ஏற்பாடு செய்து வந்தேன். அல்லாஹ் அன்னாரை இறைத் தூதராக அனுப்பிய காலத்திலிருந்து, மேலும் நான் பைஅத் செய்தது முதல் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மரணிக்கும் வரை அன்னார் (ஸல்) சார்பாக செலவுகளை நிர்வகிக்கும் பொறுப்பை நானே செய்து வந்தேன்.

ஏதேனும் ஒரு முஸ்லிம் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் வரும்போது, அவரிடம் உடுத்துவதற்கு ஆடை இல்லை என்பதை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கண்டால், எனக்கு உத்தரவிடுவார்கள். உடனே நான் சென்று கடன் வாங்கி, அவருக்கான ஆடையை வாங்கி அவருக்கு அணிவிப்பேன்; அவருக்கு உணவளிப்பேன். எந்த அளவுக்கென்றால், இணைவைப்பாளர்களில் ஒரு நபர் என்னைச் சந்தித்து, பிலாலே! என்னிடம் தாராளமாக செல்வம் இருக்கிறது. எனவே நீ என்னிடம் மட்டுமே கடன் வாங்க வேண்டும் என்று கூறினார். பிறகு, நான் அவ்வாறே செய்து வந்தேன்.

கூறுகின்றார்கள்: பிறகு, ஒருநாள் நான் உளூச் செய்துவிட்டு, பாங்கு சொல்வதற்காக நின்றபோது, அந்த இணைவைக்கும் வியாபாரி வியாபாரக் குழுவுடன் அங்கு வந்தார். அவர் என்னைப்

---

நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

பார்த்ததும், 'அபிஸீனியரே! என்று அழைத்தார். ஆம்! என்று நான் கூறினேன். அவர் என்னை வெறுப்புடன் பார்த்தார்; மேலும், கடுமையான சொற்களால் பேசினார்; மேலும் உமக்கும், மாதங்களுக்கும் இடையில் இன்னும் எத்தனை நாட்கள் மீதமுள்ளன என்று 'நீர் அறிவீரா? என்று கேட்டார். அதாவது, கடன் பெற்ற ஒப்பந்தத்தைக் குறித்து கூறினார். மேலும்.அந்த ஒப்பந்தத்தில் இன்ன தேதிக்குள் கொடுத்து விடுவேன் ; அல்லது ஒரு மாதத்தில் செலுத்தி விடுவேன் என்று கூறப்பட்டிருந்தது. எனவே உமக்கு இன்னும் எத்தனை நாட்கள் மீதமுள்ளன என்று தெரியுமா? என்று அவர் கேட்டார். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் கூறினார்கள்: எனக்குத் தெரியும் : அது அருகில் உள்ளது; நாள் நெருங்கி விட்டது என்று நான் கூறினேன். அப்போது, உமக்கும், அதற்கும் இடையில் நான்கு நாட்கள் மட்டுமே மீதம் உள்ளன என்று அவர் கூறினார். கடனை திருப்பிக் கொடுப்பதற்கு நிபந்தனையாக நிர்ணயிக்கப்பட்ட நாட்களில் வெறும் நான்கு நாட்கள் மட்டுமே மீதம் இருக்கின்றது. உமது பொறுப்பில் இருக்கும் அந்த கடன் தொடர்பாக நான் உம்மை பிடிப்பேன் ; மேலும், உம்மை நீர் முன்பு இருந்த அதே நிலைக்கு அனுப்பி விடுவேன். அதாவது நீர் அந்த நிலையில் ஆடுகளை மேய்ப்பீர் என்று அவர் கூறினார்.

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: மக்களின் மனதில் இருக்கும் அந்த நிலை எனது உள்ளத்தில் ஏற்பட்டு விட்டது. ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: மிகவும் உருக்கமான நிலை உருவாகி விட்டது. எந்த அளவிற்கு என்றால் நான் இஷா தொழுகையை தொழுதேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தமது வீட்டாரிடம் திரும்பிச் சென்றார்கள். நான் அன்னாரை சந்திப்பதற்கு அனுமதி வேண்டினேன். அன்னார் (ஸல்) அனுமதி நல்கிவிட்டார்கள். இரவில் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானேன். மேலும் நான் கூறினேன்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனது தாயும், தந்தையும் தங்கள் மீது அர்ப்பணம்! நான் எந்த இணைவைப்பாளரிடமிருந்து கடன் வாங்கி இருந்தேனோ, அவர் என்னிடம் இன்ன! இன்ன! கூறினார் என்று கூறினேன்; என் சார்பாக அவருக்கு கொடுப்பதற்கு தங்களிடமும் எதுவும் இல்லை. ஏனெனில், இன்ன நபருக்கு வாங்கிக் கொடு என்று தாங்கள் கூறியிருந்தீர்கள்; நானும் தங்களுக்காக கடன் வாங்கி கொடுத்திருந்தேன்.ஆக,தற்போது தங்களிடமும் இல்லை; என்னிடமும் இல்லை; அவரோ என்னை இழிவுபடுத்த இருக்கின்றார்; என் சார்பாக அதனை செலுத்துவதற்கு அல்லாஹ் தனது தூதருக்கு வழங்கும் வரை நான் முஸ்லிம்களாகி விட்ட அந்த சமுதாயங்களில் ஒரு சமுதாயத்தின் பக்கம் சென்று விடுவதற்கு எனக்கு தாங்கள் (ஸல்) அனுமதி நல்குங்கள்.

கூறுகின்றார்கள்: நான் (வீட்டிலிருந்து) வெளியேறினேன். எது வரை என்றால், நான் எனது வீட்டை வந்தடைந்து இருந்தேன்.

அதாவது நான் அங்கிருந்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் அனுமதி பெற்று வீட்டிற்கு வந்து விட்டேன். அதிகாலையில் பொழுது விடிந்ததும், இங்கிருந்து புறப்பட்டு விட வேண்டும் என்று நான் எனது வாள், எனது பை, எனது காலணி மற்றும் எனது கேடயம் ஆகியவற்றை எனது தலைக்கு அருகிலேயே வைத்திருந்தேன். நான் இவ்வாறு எண்ணம் கொண்டிருந்தேன்.

கூறுகின்றார்கள்: காலையில் ஒரு நபர் ஓடோடி வந்தவாறு, பிலாலே! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி விடு! என்று என்னை அழைத்துக் கொண்டிருந்தார்.

கூறுகின்றார்கள்: நான் பயணத்தில் செல்வதற்கு பகரமாக அன்னார் (ஸல்) அழைத்து விட்டதால் சென்று விட்டேன். நான் அன்னாரின் சமூகத்தில் ஆஜராகியபோது நான் கண்டது என்னவென்றால், நான்கு ஒட்டகங்களில் பொருட்கள் ஏற்றப்பட்டுள்ளன. அப்போது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தற்போது நான் பயணத்தில் செல்கிறேன் என்று கூறி செல்வதற்கு அனுமதி வேண்டினேன். அப்போது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) என்னிடம் கூறினார்கள்:

மகிழ்ச்சியடையுங்கள்! அல்லாஹ் உமது கடனை அடைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்துவிட்டான். பிறகு அன்னார் (ஸல்), 'பொருட்கள் சுமத்தப்பட்ட நான்கு ஒட்டகங்களை நீர் பார்க்கவில்லையா? என்று கேட்டார்கள். அதற்கு, நிச்சயமாக பார்த்தேன் என்று நான் கூறினேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அவற்றின் கழுத்துகளும், அவற்றின் மீதுள்ள சுமைகளும் உமக்குரியவைதான். அதாவது, அந்த ஒட்டகங்களும் உம்முடையவையாகும்; அவற்றின் மேல் உள்ள பொருட்கள் அனைத்தும் உமக்குரியவையாகும்.

அவற்றின் மீது துணிகளும், தானியங்களும் உள்ளன. அவற்றை ஃபதக்கின் தலைவர் எனக்குப் அன்பளிப்பாக! அனுப்பியுள்ளார். அவற்றை எடுத்துக் கொண்டு உமது கடனை அடைத்துவிடு! என்றார்கள்.

ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அவ்வாறே செய்தேன். பிறகு, நான் பள்ளிவாசலுக்குச் சென்றபோது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அங்கு அமர்ந்திருந்தார்கள். நான் அவர்களுக்கு ஸலாம் கூறினேன். அப்போது, 'உமக்கு நேர்ந்த பிரச்சனை என்ன ஆயிற்று?' என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) மீது இருந்த பொறுப்பு அனைத்தையும் அல்லாஹ் நிறைவேற்றிவிட்டான்; இனி அடைக்க வேண்டிய கடன் எதுவும் பாக்கி இல்லை' என்று நான் கூறினேன். அப்போது, 'ஏதேனும் பொருள் மீதம் உள்ளதா? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். நான் 'ஆம்! என்றேன்.

அதற்கு, அன்னார் (ஸல்) கூறினார்கள்: 'பார்! இதிலிருந்து அந்த செல்வத்திலிருந்து எனக்கு நிம்மதி அளிப்பாயாக. அதாவது மீதமுள்ள இந்தச் செல்வத்தையும் ஏழைகளுக்குச் செலவழித்து விடு! ஏனெனில், நீர் அதனை கொடுத்து எனக்கு அமைதி தரும் வரை நான் என் வீட்டாரிடம் செல்ல மாட்டேன்.

அன்னார் (ஸல்) இஷா தொழுத பிறகு என்னை அழைத்து, 'உம்மிடம் இருந்த பிரச்சனை என்ன ஆயிற்று? அதாவது, மீதமிருந்த பொருள் என்ன ஆயிற்று? பகிர்ந்தளிப்பதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடு என்ன ஆயிற்று? என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கேட்டார்கள்.

ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:


வாங்குவதற்கு நம்மிடம் யாருமே வரவில்லை; அது அப்படியே என்னிடம் இருக்கிறது' என்று நான் கூறினேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அன்றைய இரவைப் பள்ளிவாசலிலேயே கழித்தார்கள். நல்லது! அப்படியானால் நானும் வீட்டிற்குச் செல்ல மாட்டேன்; பள்ளிவாசலிலேயே தங்கியிருப்பேன் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

மறுநாள் இஷா தொழுத பிறகு அன்னார் (ஸல்) என்னை அழைத்து, 'உமக்கு என்ன நேர்ந்தது என்ன ஆயிற்று? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ் உங்களை அதிலிருந்து நிம்மதியடையச் செய்துவிட்டான்' என்று நான் கூறினேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அல்லாஹ்வின் பெருமையை எடுத்துரைத்து அல்லாஹ்வைப் புகழ்ந்தார்கள். அதாவது அந்தப் பொருள் பகிர்ந்தளிக்கப்பட்டுவிட்டது.

அந்த செல்வம் தம்மிடம் இருக்கும் நிலையில் தமக்கு மரணம் வந்து விடுமோ என்ற அச்சத்தில் அன்னார் (ஸல்) அல்லாஹ்வின் பெருமையை எடுத்துரைத்தார்கள்; மேலும் அவனை புகழ்ந்தார்கள். ஹஸ்ரத் பிலால் (ரலி) கூறுகின்றார்கள்: பிறகு நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்தொடர்ந்து சென்றேன்; எதுவரை என்றால் அன்னார் (ஸல்) தமது தூய்மையான மனைவியரிடம் சென்று ஒவ்வொருவருக்கும் ஸலாம் கூறினார்கள். பிறகு அன்னார் (ஸல்) இரவைக் கழிக்கும் அந்த இடத்திற்கு சென்று விட்டார்கள். (ஸுனன் அபூதாவூத், கிதாபுல் கராஜ்... பாப்: முஷ்ரிக்களின் பரிசுகளை இமாம் ஏற்றுக்கொள்வது, ஹதீஸ்: 3055)

ஹஸ்ரத் உம்மு ஸுன்புலஃ (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: 'நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஓர் அன்பளிப்பை எடுத்துக் கொண்டு ஆஜரானேன். அப்போது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்தபோது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தூய்மையான மனைவிமார்கள் அதை வாங்க மறுத்துவிட்டார்கள்; மேலும், 'நாங்கள் அன்பளிப்புகளை ஏற்பதில்லை' என்று கூறினார்கள். பிறகு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் வந்து, உம்மு ஸுன்புலஃவின் அன்பளிப்பை ஏற்றுக் கொள்ளுங்கள்; ஏனெனில் அவர் நமது கிராமவாசிகளைச் சேர்ந்தவர் ஆவார்; நாம் அவருடைய நகரவாசிகளைச் சேர்ந்தவர்கள் ஆவோம்' என்று கூறினார்கள். பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அவருடைய அன்பளிப்பை ஏற்றுக் கொண்டு,



அவர்களுக்கு இன்ன இன்ன பள்ளத்தாக்கை (நிலத்தை) பரிசாக வழங்கினார்கள். (அஸதுல் காபா, தொகுதி 7, பக்கம் 336, தாருல் குதுபில்இல்மியா, 1994)

அதாவது, அந்த அன்பளிப்பும் பெறப்பட்டது. பிறகு, முன்பே விவரிக்கப்பட்டது போன்று அவருக்கு அன்பளிப்பாக ஒரு முழுப் பகுதியையும் வழங்கிவிட்டார்கள்.

சிறிய அன்பளிப்புக்கு பகரமாக கூட அளவற்ற முறையில் நல்கி வந்தார்கள்.

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்களுக்கு, அவர்களின் குதிரை ஓடிச் செல்லக் கூடிய எல்லை வரை நிலத்தை மானியமாக வழங்கக் கட்டளையிட்டார்கள். 'உம் குதிரையை ஓடவிடு! அது எங்கு சென்று நிற்கிறதோ, அதுவரை உள்ள பகுதி முழுதும் உம்முடையது' என்று கூறினார்கள். வெற்றிகளுக்குப் பிறகு பரந்த நிலப்பரப்பு கைவசமாகியிருந்தது. எனவே அவர் தம் குதிரையை ஓட்டினார்; அது ஓரிடம் வரை சென்று நின்றது. அது நின்றதும், 'இன்னும் கொஞ்சம் நிலம் கிடைத்தால் நன்றாக இருக்குமே! என்று விரும்பினார்கள். உடனே தம் கைவசமிருந்த சாட்டையை எடுத்து எறிந்தார்கள். அது வெகுதூரம் சென்று விழுந்தது. அதைக் கண்ட ஹஸ்ரத் நபி (ஸல்) அவவர்கள், 'சாட்டை விழுந்த இடம் வரை உள்ள நிலத்தையும் அவருக்கே கொடுத்துவிடுங்கள்! என்று கூறினார்கள். அதாவது, குதிரை நின்ற இடத்திலிருந்து சாட்டை விழுந்த இடம் வரை உள்ள நிலத்தையும் அவருக்கே கொடுத்துவிட்டார்கள். (ஸுனன் அபூ தாவூத், கிதாபுல் கராஜ்... பாபு ஃபீ இக்தாஇல் அராளீன், ஹதீஸ்: 3072)

ஹஸ்ரத் ஸுபைர் பின் முத்இம் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஒருமுறை அவர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் சென்று கொண்டிருந்தார். அன்னாருடன் மற்ற மக்களும் இருந்தனர். இது ஹுனைன் போரிலிருந்து அன்னார் (ஸல்) திரும்பி வந்து கொண்டிருந்தபோது நடந்த சம்பவமாகும். சில காட்டரபிகள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைச் சூழ்ந்து கொண்டனர்; மேலும், அன்னாரிடம் யாசிக்கத் தொடங்கி விட்டனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு கருவேல மரத்தின் பக்கம் ஒதுங்கும் அளவுக்கு அன்னாரை அவர்கள் நிர்ப்பந்தித்து விட்டனர்; அதில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மேலங்கி சிக்கிக்கொண்டது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அங்கே நின்று விட்டார்கள். சில அறிவிப்புகளில் இவ்வாறும் வருகிறது:

மேலங்கி சிக்கிக் கொண்டபோது அதை அந்த நபர்கள் பலமாக இழுக்கத் துவங்கியதால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கழுத்தில் அடையாளமும் பதிந்து விட்டது. அப்போது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என் மேலங்கியைக் கொடுத்து விடுங்கள்; இவ்வளவு முள்ளுள்ள மரங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப என்னிடம் ஆடு, மாடுகள் இருந்திருந்தால் நான் நிச்சயமாக அவற்றை உங்களிடையே பங்கிட்டுக் கொடுத்திருப்பேன்; நீங்கள் என்னை ஒருபோதும் கருமியாகவோ, பொய்பேசுபவராகவோ,கோழையாகவோ காணமாட்டீர்கள். (ஸஹீஹ் புஹாரி மொழிபெயர்க்கப்பட்ட கிதாபுல் ஜிஹாது, பாப் அஷ்ஷஜாஅத் ஃபில் ஹர்ப் வல்ஜுப்ன் ஹதீஸ் 2821, தொகுதி 5 பக்கம் 185 நஸாரத் இஷாஅத் ரப்வா, அல்-லுஃலு வல் மர்ஜான் ஸீரத் என்ஸைக்ளோபீடியா தொகுதி 9 பக்கம் 352-353 மக்தபா தாருஸ் ஸலாம் ரியாத்)

இந்த நிகழ்வை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

மக்காவின் வெற்றி, ஹுனைன் போர் ஆகியவற்றுக்குப் பிறகு, தோற்கடிக்கப்பட்ட எதிரிகளின் அபராதங்கள் மற்றும் போர்க்களத்தில் அவர்கள் விட்டுச் சென்ற பொருட்களிலிருந்து ஒன்றுதிரட்டப்பட்ட அந்தச் செல்வங்களை வழக்கம்போல் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இஸ்லாமிய படைகளுக்கு இடையே பங்கிட இருந்தார்கள். ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் அன்னார் (ஸல்) அந்தச் செல்வங்களை முஸ்லிம்களுக்கு இடையே பங்கிடுவதற்குப் பதிலாக மக்காவிலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள மக்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து விட்டார்கள்.

அந்த மக்களின் உள்ளங்களில் இன்னும் ஈமான் உருவாகியிருக்கவில்லை. பலர் இன்னும் காஃபிர்களாகவே இருந்தனர், மேலும் பலர் புதிதாக முஸ்லிம் ஆனவர்களாக இருந்தனர். ஒரு சமுதாயம் தங்கள் செல்வத்தை மற்ற மக்களுக்கு இடையே பங்கிட்டுக் கொடுப்பது அவர்களுக்கு முற்றிலும் புதிய விஷயமாக இருந்தது. இந்தச் செல்வம் பகிர்ந்தளிக்கப்பட்டதன் காரணமாக அவர்களின் உள்ளங்களில் நன்மையும், இறையச்சமும் உருவாகுவதற்குப் பகரமாக அவர்களின் பேராசை மேலும் அதிகரித்து விட்டது.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டு, அதிகமான கோரிக்கைகளுடன் அவர்கள் அன்னாரை நெருக்கடிக்குள்ளாக்கத் தொடங்கினர். எந்தளவுக்கு என்றால், அன்னாரைத் தள்ளிக் கொண்டே சென்று ஒரு மரம் வரை நகர்த்திச் சென்றனர். மேலும், ஒருவன் அன்னாரது தோள்களில் வைக்கப்பட்டிருந்த ஆடையைப் பிடித்து, அன்னார் (ஸல்) மூச்சுத் திணறும் வகையில் முறுக்கத் தொடங்கி விட்டான்.

அப்போது அன்னார் (ஸல்) கூறினார்கள்:

மக்களே! என்னிடம் வேறு ஏதேனும் இருந்தால் அதையும் நான் உங்களுக்குக் கொடுத்திருப்பேன். நீங்கள் என்னை ஒருபோதும் கருமியாகவோ அல்லது கோழையாகவோ காணமாட்டீர்கள்.

பின்னர், அன்னார் (ஸல்) தமது ஒட்டகத்தின் அருகே சென்றார்கள். அதன் ஒரு முடியைப் பிடுங்கி அதை உயர்த்திப் பிடித்தார்கள். மேலும், கூறினார்கள்: மக்களே! அரேபியச் சட்டப்படி அரசாங்கத்தின் பங்காக இருக்கும் ஐந்தில் ஒரு பங்கைத் தவிர உங்கள் செல்வங்களில் இருந்து இந்த முடி அளவு கூட எனக்குத் தேவையில்லை; அந்த ஐந்தாவது பங்கைக் கூட நான் என் சொந்தச் செலவுக்குப் பயன்படுத்துவதில்லை; மாறாக, அதையும் உங்களுடைய மக்களின் பணிகளிலேயே செலவிடப்படுகிறது. மேலும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள், நம்பிக்கைத் துரோகம் செய்பவன் கியாமத் நாளில் இறைவனின் முன்னிலையில் அந்த நம்பிக்கைத் துரோகத்தின் காரணமாக இழிவடைவான்.

அன்னார் (ரலி) இந்த நிகழ்வை விளக்கியவாறு, தொடர்ந்து இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஆட்சியதிகாரத்தை விரும்பினார்கள்' என்று மக்கள் கூறுகின்றனர். அரசர்களுக்கும், சாதாரண மக்களுக்கும் இடையே இத்தகைய தொடர்புதான் இருக்குமா? அரசரை இந்த அளவிற்குத் தள்ளி விட்டு, அவரது கழுத்தில் துணியை மாட்டி நெரிக்கும் சக்தி யாருக்காவது இருக்குமா? அல்லாஹ்வின் தூதர்களைத் தவிர வேறு யார் இத்தகைய முன்மாதிரியைக் காட்ட முடியும்?'
(தீபாச்சா தஃப்ஸீர் அல்குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20, பக்கம் 357-358)

தபூக் போரின் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அழகான ஒரு குதிரை கிடைத்தது, அதன் குரல் அன்னாருக்கு மிகவும் பிடித்திருந்தது. அப்போது அன்ஸாரிகளில் ஒருவர், 'எனது தாயும், தந்தையும் உங்களுக்கு அர்ப்பணமாகட்டும்! இந்த குதிரையை எனக்குக் கொடுத்து விடுங்கள்' என்று கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'இது உம்முடையது' என்று கூறினார்கள். (ஷரஃபுல் முஸ்தஃபா, பகுதி 3, பக்கம் 299, ஜாமிஅ அப்வாப் மா கான் லின்னபி..., ஹதீஸ் 1040, தாருல்-பஷாயிர் அல்-இஸ்லாமிய்யா, முதல் பதிப்பு 2003)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணித்த நோயின் போது, ஆயிஷாவே! அந்தத் தங்கம் என்ன ஆயிற்று?' என்று கேட்டார்கள். அவர்கள் வீட்டில் இருந்த ஐந்து அல்லது ஏழு அல்லது எட்டு அல்லது ஒன்பது தங்க நாணயங்களை எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். அன்னார்(ஸல்) அவற்றை தமது கரங்களில் புரட்டிக் கொண்டே கூறினார்கள்:

முஹம்மது (ஸல்) அல்லாஹ்வைச் சந்திக்கும்போது, இந்தத் தங்கம் அவரிடம் இருந்தால், அல்லாஹ்வைப் பற்றி முஹம்மது என்ன நினைப்பார்? (அதாவது அல்லாஹ்வின் முன் அவர் எப்படி நிற்பார்?) ஆயிஷாவே! இவற்றை செலவு செய்து விடு! அதாவது பங்கிட்டுக் கொடுத்து விடு!'
(முஸ்னத் அஹ்மது பின் ஹன்பல், தொகுதி 8, பக்கம் 53, முஸ்னத் ஆயிஷா ஹதீஸ் 24726, ஆலமுல்-கிதாப் பெய்ரூத் 1998)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருமுறை தமது வீட்டிற்கு சென்று, 'நம் வீட்டில் என்ன இருக்கிறது?' என்று கேட்டார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் இரண்டு தங்க நாணயங்களை எடுத்துக் கொடுத்தார்கள். மேலும், இவை மட்டும்தான் உள்ளன' என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவற்றைத் தமது உள்ளங்கையில் வைத்துக் கொண்டார்கள் மேலும், இரண்டு அஷ்ரஃபிகளை தமக்குப் பின்னால் விட்டுச் செல்லும் அந்த நபியின் நிலை என்ன? அதை அப்போதே பகிர்ந்துவிட்டார்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 9, பக்கம் 281, பதிப்பு 2022)

ஹுனைன் போர்ச் செல்வங்களின் விவரங்களாக இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

அங்கு போர் செல்வங்களில் ஆறு ஆயிரம் (6000) அடிமைகளும், பணிப் பெண்களும் கிடைத்தனர். சில அறிவிப்புகளில் எட்டாயிரம் (8000) என்றும் கூறப்படுகிறது. இருபத்தி நான்காயிரம் (24000) ஒட்டகங்கள் கிடைத்தன என்றும் கூறப்பட்டுள்ளது. நாற்பதாயிரம் (40000) -க்கும் அதிகமான ஆடு மாடுகள். மேலும் நான்கு ஆயிரம் (4000) ஊக்கியா வெள்ளி. இது ஏறத்தாழ நானூற்று தொண்ணூறு (490) கிலோ கிராம் தங்கமாகும். ஒரு ஊக்கியா என்பது பத்தரை தோலாவுக்குச் சமமாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் போர்ச் செல்வங்களைப் பங்கீடு செய்யத் தொடங்கியபோது, உள்ளங்களை இணக்கமாக்குதல் என்பதிலிருந்து தொடங்கினார்கள். அவர்கள் அரேபியாவின் பெரும் தலைவர்களாகவும், தங்கள் கோத்திரங்களில் கண்ணியமும், பெருமையும் மிக்கவர்களாகவும் இருந்தனர். அவர்களை நெருக்கமாக்குவதற்காக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அன்பளிப்புகளை வழங்கினார்கள்.

அவர்களில் சிலருக்கு நூறு ஒட்டகங்கள் கொடுத்தார்கள். சிலருக்கு ஐம்பது ஒட்டகங்கள் கொடுத்தார்கள்; வெள்ளி மற்றும் அடிமைகள் தனி. அபூ ஸுஃப்யான் பின் ஹர்ப் என்பவருக்கு நூறு ஒட்டகங்கள் கொடுத்தார்கள். அபூ ஸுஃப்யான், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சமூகத்தில் வந்து, அன்னாருக்கு முன் குவிக்கப்பட்டிருந்த வெள்ளிக் குவியலைக் கண்டு, 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் குறைஷிகளிலேயே மிகப் பெரும் செல்வந்தராகிவிட்டீர்கள்!' என்று கூறினார். அதற்கு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் புன்னகைத்து, அபூ ஸுஃப்யானுக்கு நாற்பது ஊக்கியா வெள்ளியும், நூறு ஒட்டகங்களும் கொடுத்தார்கள்.

அபூ ஸுஃப்யான்: 'எனது மகன் யஸீதுக்கும் வழங்குங்கள்' என்று கேட்டார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவருக்கும் நாற்பது ஊக்கியா வெள்ளியும், நூறு ஒட்டகங்களும் வழங்க உத்தரவிட்டார்கள். இந்த யஸீத், அபூ ஸுஃப்யானின் மகன் ஆவார். 'கெட்ட பெயர் பெற்ற காலத்தின் யஸீத்' என்று கூறப்படுகிறானே, அவன் இந்த அபூ ஸுஃப்யானின் மகன் அல்ல; அதாவது அவன் ஹஸ்ரத் முஆவியாவின் மகனாக இருந்தான்.

எப்படியோ, 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனது மற்றொரு மகனான முஆவியாவுக்கும் கொஞ்சம் வழங்குங்கள்' என்று அபூ ஸுஃப்யான் கூறினார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவருக்கும் நாற்பது ஊக்கியா வெள்ளியும், நூறு ஒட்டகங்களும் வழங்க உத்தரவிட்டார்கள்.

இதனால், எனது தாயும், தந்தையும், தங்களுக்கு அர்ப்பணமாகட்டும்! தாங்கள் மிகவும் கொடை குணம் கொண்டவர் ஆவீர்கள்; நான் தங்களுடன் போர்களும் புரிந்திருக்கின்றேன்; தாங்கள் எவ்வளவு சிறந்த போர்வீரர் ஆவீர்கள்! பின்னர் தங்களுடன் சமாதானமும் செய்து கொண்டேன், தாங்கள் எவ்வளவு சிறந்த சமாதானம் செய்பவர் ஆவீர்கள்! அல்லாஹ் தங்களுக்கு நற்கூலியை வழங்கட்டும்! என்று அபூ ஸுஃப்யான் கூறத் தொடங்கினார். (ஷரஹ் அல்லாமா அஸ்ஸுர்கானி தொகுதி 4 பக்கம் 18-19, ஸுபுலுல் ஹுதா தொகுதி 5 பக்கம் 396, தாயிராயே மஆரிஃப், ஸீரத் முஹம்மது ரஸூலுல்லாஹ், தொகுதி 9 பக்கம் 289 பஸ்மயே இக்பால் லாகூர், கஸ்வாயே ஹுனைன், பக்கம் 273-274, கஸ்வாயே ஹுனைன் அல் பாஷமூல் பக்கம் 217, ஃபர்ஹங் ஸீரத் ஸீர்லஃப்ச் ஊகிய்யா பக்கம் 49)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தாராள குணத்தாலும், கொடைகளாலும் பயனடைந்தவர்களில் மக்காவின் ஒரு தலைவரான ஸஃப்வான் பின் உமய்யாவும் ஒருவர் ஆவார்.

இவர் அதே ஸஃப்வான் ஆவார். அதாவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹுனைன் போருக்காக இவரிடம் போர்க் கவசங்களையும், ஆயுதங்களையும் இரவலாகப் பெற்றிருந்தார்கள். மேலும் இவர் இணைவைப்பாளராக இருந்த நிலையிலேயே ஹுனைன் போரிலும் பங்கெடுத்திருந்தார். ஆனால் அதே போரில் இவரது மனம் மாறத் தொடங்கியது. போர்ச் செல்வங்களைப் பங்கிடும் நேரம் வந்தபோது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இவருக்கு நூறு ஒட்டகங்களை வழங்கினார்கள். ஸஹீஹ் முஸ்லிமின் அறிவிப்பின்படி, அவருக்கு முன்னூறு ஒட்டகங்களை வழங்கினார்கள்.

மற்றோர் அறிவிப்பில் கூறப்படுவதாவது: அதே நாட்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு பள்ளத்தாக்கின் வழியாகச் சென்று கொண்டிருந்தார்கள். அதில் போரில் கைப்பற்றப்பட்ட ஒட்டகங்களும், ஆடுகளும் இருந்தன. அந்தப் பள்ளத்தாக்கு முழுவதும் அந்த ஒட்டகங்களாலும், ஆடுகளாலும் நிறைந்திருந்தது.

ஸஃப்வான் இவ்வளவு பெருமளவிலான செல்வத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார். அதைக் கண்ட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அபூ வஹ்பே! (இது ஸஃப்வானின் புனைப்பெயர்) இந்தப் பள்ளத்தாக்கு உம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டதா?' என்று கேட்டார்கள். அதற்கு அவர்: 'ஆம்!' என்றார். 'இந்தச் சொத்துக்கள் அனைத்தும் உமக்குரியவையாகும்; இவற்றை நீர் எடுத்துக்கொள்க! என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இதைக் கேட்ட ஸஃப்வான் சட்டென்று கூறினார்:

தாங்கள் (ஸல்) அல்லாஹ்வின் தூதர் ஆவீர்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன்! ஏனெனில், இந்த மாதிரியான கொடையை ஒரு நபியால் மட்டுமே வழங்க முடியும்.'

மற்றோர் அறிவிப்பின்படி ஸஃப்வான் பின் உமய்யாவே கூறுகின்றார்:

ஹஸ்ரத் நபி (ஸல்)அவர்கள் ஹுனைன் போரின் செல்வங்களை எனக்கு வழங்கி வந்தார்கள். அதன் விளைவு என்னவென்றால், ஆரம்பத்தில் படைப்பினங்களிலேயே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தான் எனக்கு மிகவும் வெறுப்பிற்குரிய நபராக இருந்தார்கள். பின்னர் அனைத்துப் படைப்பினங்களிலும் எனக்கு அன்னார் (ஸல்) மிகவும் பிரியமானவராக ஆகிவிட்டார்கள்.

சுருங்கக் கூறின், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அரேபியாவின் பல்வேறு தலைவர்களுக்கு வழங்கிய ஒட்டகங்களின் எண்ணிக்கை ஐம்பதுக்கும் அதிகம் என்று கூறப்படுகிறது.


(ஸஹீஹ் முஸ்லிம் கிதாபுல்-ஃபழாயில், பாப் ஃபீ ஸகாயிஹி, ஹதீஸ் எண் 2313, தாயிராயே மஆரிஃப், ஸீரத் முஹம்மது ரஸூலுல்லாஹ், தொகுதி 9 பக்கம் 236-237 பஸ்மயே இக்பால் லாகூர், ஷரஹ் ஸுர்கானி தொகுதி 4 பக்கம் 21 தாருல் குதுபில் இல்மிய்யா, அல்-லுஃலுஉல் மக்னூன் சீரத் என்சைக்ளோபீடியா தொகுதி 9 பக்கம் 341 மக்தபஃ தாருஸ்-ஸலாம் அல்-ரியாத், ஸுபுல்-ஹுதா தொகுதி 5 பக்கம் 396 தாருல் குதுபில்-இல்மிய்யா)

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் ஒரு சந்தர்ப்பத்தில் ஏராளமான ஆடுகளும், மாடுகளும் இருந்தன. இவ்வளவு ஆடுகளும், மாடுகளும் இருக்கின்றனவே; ரோம, பாரசீக பேரரசர்களிடம் கூட இவ்வளவு இல்லை என்று ஒரு நிராகரிப்பாளர் அன்னாரிடம் கூறினார். அன்னார் (ஸல்) அவை அனைத்தையும் அவருக்கே வழங்கிவிட்டார்கள். அவர் உடனே ஈமான் கொண்டார்; மேலும், ஒரு நபியைத் தவிர வேறு யாராலும் இத்தகைய மாபெரும் கொடைத்தன்மையைக் காட்ட முடியாது என்றும் கூறினார்.' (மல்ஃபூஸாத் தொகுதி 2, பக்கம் 425, பதிப்பு 2022)

எவ்வாறாயினும், அதற்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் மீதமுள்ள மக்களை அழைக்குமாறு ஹஸ்ரத் ஸைது பின் ஸாபித் (ரலி) அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள். மேலும் போர் செல்வங்களில் எஞ்சிய பொருட்களைப் பங்கீடு செய்தார்கள். அதில் ஒவ்வொரு பங்கிலும் நான்கு ஒட்டகங்கள் அல்லது நாற்பது ஆடுகள் வந்தன. இவ்வாறாக, இதுவரை கிடைத்த போர்ச் செல்வங்களை விட மிகவும் அதிகமாக இருந்த அத்தனை போர்ச் செல்வங்களையும் மக்களிடையே பங்கீடு செய்து கொடுத்து விட்டார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களின் புனித வாழ்க்கையின் சிந்திக்கத்தக்க ஓர் அம்சம் இதுவாகும்.அதாவது, 'முஸ்லிம்கள் ஏழைகளாகவும், செல்வம் இல்லாதவர்களாகவும் இருந்ததால் தான் இந்தப் போர்களைத் தொடங்கினார்கள்' என்று எதிரிகள் அவர்களையும், அவர்களின் போர்களைப் பற்றியும் பழிசுமத்துகின்றனர். இதில் சிறிதேனும் உண்மை இருந்திருந்தால், ஹுனைன் போர் செல்வங்களை பங்கீடு செய்த விதம் வேறு மாதிரியாக இருந்திருக்கும். ஆனால், இங்கு போரில் கிடைத்த செல்வத்தின் பெரும் பகுதி உள்ளங்களை இணக்கமாக்குவதற்காக அந்நியர்களுக்குக் கொடுக்கப்பட்டதையும், குறைஷிகளின் தலைவர்களுக்குக் கொடுக்கப்பட்டதையும் நாமோ பார்க்கிறோம்; இன்னும் கூறப்போனால், சில அறிவிப்புகளின்படி, அனைத்துச் செல்வங்களும் மற்ற மக்களுக்கே பங்கீடு

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

செய்யப்பட்டன. (ஷரஹ் ஸர்கானி தொகுதி 4, பக்கம் 27, தாருல் குதுபில்இல்மியா பெய்ரூத்; கஸ்வாயே ஹுனைன் - அஷ் ஷிப்லி பக்கம் 270; தாயிராயே மஆரிஃப், ஸீரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) தொகுதி 9, பக்கம் 289, 322-323 - ஸீரத்துன் நபிய்யீன் - ஷிப்லி நுஃமானி பகுதி 1, பக்கம் 396 - தொகுதி 4, பக்கம் 247, மக்தபஃ இஸ்லாமியா 2012)

இதில் சில நன்மைகளும், தொலைநோக்குப் பார்வைகளும் இருந்திருக்கலாம். ஆனால், உலகம் இதைப் பார்த்தது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமக்காக எதையும் வைத்துக் கொள்ளவில்லை; மாறாக, தங்கள் உயிரைத் தரத் தயாராக இருந்த உண்மையுள்ள தோழர்களான மதீனாவின் அன்ஸார்களுக்குக் கூட அந்தப் போர்ச் செல்வங்களிலிருந்து எதுவுமே கொடுக்கவில்லை அல்லது மிகக் குறைவாகவே கொடுத்தார்கள்.

ஹுனைன் போரின் போது ஒரு பெண்மணி வந்து சில கவிதைகளைப் படித்தார்; அதில் அவர் ஹவாஸின் கோத்திரத்தில் அன்னாரின் பால்குடி நாட்களைக் குறிப்பிட்டார். எனவே ஹவாஸின் மக்களிடமிருந்து பெறப்பட்ட செல்வங்களை அன்னார் (ஸல்) அவர்களுக்கே திரும்பக் கொடுத்து, அந்த மக்களுக்கு மிக அதிக அளவில் கொடையும் அளித்தார்கள்.அன்னார் (ஸல்) அவர்களுக்குக் கொடுத்தவற்றின் மதிப்பு மதிப்பிடப்பட்டபோது, அது ஐந்து லட்சம் திர்ஹம்களுக்குச் சமமாக இருந்தது.

இப்னு திஹ்யா கூறுகிறார்: 'இது தாராள குணத்தின் உச்சகட்டமாகும். இதுபோன்ற ஒரு தாராள குணம் பற்றி இதற்கு முன் கேள்விப்பட்டதே இல்லை.' (ஸுபுலுல் ஹுதா வர்-ரஷாத், தொகுதி 7, பக்கம் 51, தாருல் குதுபில்-இல்மிய்யா - 1993)

ஹவாஸின் பிரதிநிதிகள் முஸ்லிம்களாக அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் வந்தபோது, தங்களின் செல்வங்களையும், கைதிகளையும் தங்களுக்குத் திரும்பத் தருமாறு அன்னாரிடம் வேண்டினர். அப்போது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எழுந்து நின்றார்கள். மேலும் கூறினார்கள்: 'உண்மையான வார்த்தையே எனக்கு மிகவும் விருப்பமானதாகும். இரண்டு விஷயங்களில் ஒன்றை மட்டும் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்; கைதிகளைத் திரும்பப் பெறுவது அல்லது செல்வத்தைப் பெறுவது. நான் ஜிஃரானாவில் அவர்களுக்காகக் காத்திருந்தேன்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தாயிஃபிலிருந்து திரும்பியபோது, பத்து இரவுகளுக்கும் மேலாக அவர்களுக்காகக் காத்திருந்து, அவர்கள் தமது செல்வங்கள் மற்றும் கைதிகளைக் கோருவார்கள் என எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இரண்டில் ஒன்றை மட்டுமே திரும்பத் தருவார்கள், இரண்டையும் தரமாட்டார்கள் என்பதை அவர்கள் தெளிவாகப் புரிந்துகொண்டபோது, 'நாங்கள் எங்கள் கைதிகளையே தேர்ந்தெடுத்துக் கொள்கிறோம்' என்றனர்.

பிறகு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களிடையே எழுந்து நின்றார்கள். மேலும் அல்லாஹ்வின் மேன்மைக்குரிய புகழை எடுத்துரைத்தார்கள். பிறகு கூறினார்கள்: உங்கள் சகோதரர்கள் எம்மிடம் தவ்பா செய்து வந்துள்ளனர். அவர்களின் கைதிகளை அவர்களுக்குத் திரும்பக் கொடுப்பதே சிறந்தது என நான் கருதுகிறேன். எனவே, உங்களில் யார் அதை மனமுவந்து திரும்பத் தர விரும்புகிறாரோ அவர் தரட்டும். உங்களில் யார் தம் பங்கிலேயே நிலைத்திருக்க விரும்புகிறாரோ, அல்லாஹ் நமக்கு வழங்கும் அடுத்த போர்ச் செல்வங்களிலிருந்து அவருக்குப் பகரமாக நாம் தருவோம்.' அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்காக நாங்கள் எங்கள் கைதிகளை மகிழ்ச்சியுடன் விட்டுத்தருகிறோம்; எங்களுக்கு எந்தப் பங்கின் தேவையும் இல்லை என்று மக்கள் கூறினர்.

உங்களில் யார் இதற்கு அனுமதி அளித்தார்?, யார் அனுமதி அளிக்கவில்லை? என்பது எமக்குத் தெரியாது;. எனவே நீங்கள் திரும்பிச் செல்லுங்கள்; உங்கள் தலைவர்கள் உங்கள் முடிவை எம்மிடம் தெரிவிக்கட்டும்' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். மக்கள் திரும்பிச் சென்றனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இங்கு மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட்டு, கைதிகள் உண்மையில் மனமுவந்துதான் திரும்ப அனுப்பப்படுகிறார்களா? என்பதை அறிய அவர்களின் தலைவர்களை அனுப்புமாறு கூறினார்கள். தலைவர்கள் அவர்களிடம் உரையாடினர். பிறகு அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் திரும்பி வந்து, மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டதாகவும், கைதிகளைத் திருப்பி அனுப்ப அனுமதித்து விட்டதாகவும் கூறினர். இவ்வாறு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எவ்வித இழப்பீடும் இன்றி ஹவாஸின் கைதிகளை விடுதலை செய்தார்கள்.
(ஸஹீஹ் அல்-புஹாரி, கிதாபுல்-வகாலத்... ஹதீஸ் எண்: 2307-2308, தொகுதி 4, பக்கம் 292-294)

அவர்களை வெறுமனே விடுதலை மட்டுமே செய்யாமல், அவர்களுக்கு புதிய ஆடைகளையும் வழங்கினார்கள். ஆடைகள் வாங்குவதற்காக அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஒரு தோழரை முறைப்படி மக்காவிற்கு அனுப்பினார்கள். மேலும், 'அவர்களில் யாரும் ஆடை இல்லாமல் விடுவிக்கப்படக் கூடாது என்றும் வலியுறுத்தினார்கள். (அஸ் ஸீரத்துல்-ஹலபிய்யா, தொகுதி 03, பக்கம் 181)

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹுனைன் போரின் போது மக்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து கேட்கத் தொடங்கினர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தம்மிடம் இருந்த ஆடு, மாடு, ஒட்டகங்களை எதுவும் எஞ்சியிராத அளவுக்கு அவர்களுக்குக் கொடுத்துக் கொண்டே இருந்தார்கள். பிறகு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'நீங்கள் என்ன விரும்புகின்றீர்கள்? நான் கருமியாக மாற வேண்டும் என்று விரும்புகின்றீர்களா? அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் கருமியும் அல்ல, கோழையும் அல்ல, பொய் பேசுபவரும் அல்ல' என்று கூறினார்கள். (ஸுபுல் அல்-ஹுதா வர்-ரஷாத், தொகுதி 7, பக்கம் 53)

இந்தக் கோணத்திலிருந்தும் நாம் காண்பது யாதெனில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கொடையும் பெருந்தன்மையும் பொருத்தமற்றதாக இருக்கவில்லை. கேட்பவர்களுக்கு அன்னார் (ஸல்) கொடுப்பார்கள்; ஒருபோதும் மறுத்ததில்லை என்பதில் சந்தேகமில்லை. ஆனால், சில சமயங்களில் கேட்பவர்களைத் ஞானம் மிக்க தொனியில் தடுத்து நிறுத்தியும் உள்ளார்கள். அதில் பல விவேகமான நன்மைகள் அடங்கியிருந்தன.

உதாரணமாக, ஒருமுறை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் செல்வங்களைப் பங்கீடு செய்து மக்களுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்; ஆனால் ஒரு நபரைப் புறக்கணித்து, அவருக்கு எதுவும் கொடுக்கவில்லை. ஹஸ்ரத் ஸஃத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: 'அந்த நபர் எனக்கு மற்றவர்களை விட மிகவும் விருப்பமானவராக இருந்தார். மற்ற மக்களுக்கு பகரமாக அவருக்கு கிடைக்க வேண்டும் என்று நான் விரும்பினேன். எனவே, 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இன்னாரை ஏன் விட்டுவிட்டீர்கள்? அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அவரை ஒரு நம்பிக்கையாளர் என்றே கருதுகிறேன்' என்று கூறினேன். அப்போது, 'முஸ்லிமே! என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் ஸஃத் (ரழி) கூறுகின்றார்கள்: நான் சிறிது நேரம் அமைதியாக இருந்தேன். பிறகு அவரைப் பற்றி எனக்குத் தெரிந்த விஷயங்கள் என்னை மீண்டும் வற்புறுத்தவே, நான் என் வார்த்தையை மீண்டும் கூறி, 'தாங்கள் இன்னாரை விட்டுவிட்டீர்களே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அவரை நம்பிக்கையாளர் என்றே கருதுகிறேன்' என்று கூறினேன். அதற்கு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், முஸ்லிமே!' என்றார்கள். பிறகு அவரைப் பற்றி எனக்குத் தெரிந்த விஷயங்கள் என்னை மீண்டும் வற்புறுத்த, நான் என் வார்த்தையைத் திரும்பக் கூறினேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களும் அதே பதிலை அளித்தார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஸஃதே! அல்லாஹ் அவரை நரக நெருப்பில் தள்ளிவிடக் கூடாது என்பதற்காகவே நான் ஒரு நபருக்கு கொடுக்கிறேன்; இருப்பினும், மற்றொரு நபர் எனக்கு அவரை விட மிகவும் விருப்பமானவராக இருக்கின்றார்.' (ஸஹீஹ் புகாரி, மொழிபெயர்ப்பு கிதாபுல்-ஈமான், அத்தியாயம்: ஒருவரது இஸ்லாம் உண்மையானதாக இல்லாதபோது...., ஹதீஸ் எண்: 27, தொகுதி 1, பக்கம் 68-69)

நீர் சொல்வது சரிதான்; ஆனால் இதில் வேறு நலன்களும் உள்ளன. அதனால்தான் நான் அவர்களுக்குக் கொடுக்கிறேன்; இதன் மூலம் அவர்களின் ஈமான் பலவீனத்திலிருந்து உறுதியாக மாறக் கூடும். சிலர் அன்பளிப்புகளைப் பெற்று அல்லது உலகியல் நன்மைகளை அடைந்து தங்கள் ஈமானில் உறுதியாக நிற்கின்றார்கள். இதற்கு முன்பும் பல உதாரணங்கள்

முன்வைக்கப்பட்டுள்ளன.

ஹஸ்ரத் ஜைனுல் ஆபிதீன் ஸய்யித் வலியுல்லாஹ் ஷாஃ ஸாஹிப் அவர்கள் இதன் விளக்கவுரையில் முஃமினன் என்றும் முஸ்லிமன் என்றும் எழுதுகின்றார்கள்.

இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் இதில் கொண்டுவந்துள்ள ஹதீஸிலிருந்து, ஈமானுக்கும் இஸ்லாத்திற்கும் இடையே உள்ள உண்மையான வேறுபாட்டைத் தெளிவுபடுத்தியுள்ளார்கள். அதாவது ஈமான் என்பது உள்ளத்தின் நிலை தொடர்பானது; அதேசமயம் இஸ்லாத்தின் தொடர்பு வெளிப்படையானது. எனவேதான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், ஒருவரைப் பற்றி கருத்து தெரிவிக்கும்போது கவனத்துடனும், எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும் என்ற ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுத்துள்ளார்கள். உள்ளங்களின் நிலையை நிச்சயம் அல்லாஹ்வே நன்கறிவான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எவருக்குக் கொடுப்பது உகந்தது அன்று என்று கருதினார்களோ, அவர் ஹஸ்ரத் ஜூஅய்ல் பின் சுராகா (ரலி) என்ற தூய்மையான முஹாஜிர் ஆவார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் அவரை நேசித்தார்கள். இருப்பினும், ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள் மீண்டும், மீண்டும் அழுத்தம் கொடுத்தபோதிலும், அவர்களுக்கு இந்த ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுத்து உள்ளபடியே ஈமானுக்கும், இஸ்லாத்திற்கும் இடையே உள்ள வித்தியாசத்தைக் கருத்தில் கொள்ளும் போதனையை வழங்கினார்கள்.

இந்த நிகழ்விலிருந்து தெரியவருவது யாதெனில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பலவீனமான நபர்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கற்றுக் கொடுத்துள்ளார்கள்;அவர்கள் தங்களின் பலவீனத்தினால் தடுமாற்றம் அடைந்துவிடக் கூடாது என்பதற்காகவே இவ்வாறு செய்யப்பட்டது. ஒரு சிறிய பலவீனமான செடிக்கு கவனிப்பும் பாதுகாப்பும் தேவைப்படுகிறது; ஆனால் பெரிய மரத்திற்கு அந்த அளவுக்குத் தேவைப்படுவதில்லை. மக்கள் தங்களின் ஈமானில் தடுமாறி விழுவதிலிருந்து காப்பதற்காகவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சிறு சிறு விஷயத்தைக் கூட கருத்தில் கொண்டார்கள்.

இந்த விஷயத்தில் சில அறிவீனமான நபர்கள் மிகவும் தவறான அணுகுமுறையை மேற்கொள்கிறார்கள். தடுமாற்றமடைந்து விழுகின்ற ஒரு நபர் தடுமாற்றமடைவதற்கு காரணியாக இருக்கும் அப்படிப்பட்ட விவகாரத்திலிருந்து அவரைக் காப்பாற்றி வைப்பதற்குப் பதிலாக, அவர்கள் சுயமே அந்த நபரின் தடுமாற்றத்திற்குக் காரணமாக ஆகிவிடுகின்றனர்; அது மட்டுமின்றி, இரக்கமுள்ள அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதற்குப் பதிலாக, அவர்களின் பலவீனமான நம்பிக்கையின் மீது பகிரங்கமாகத் தாக்குதல் நடத்துகிறார்கள். இது சிலருக்கு ஒரு பழக்கமாகவே இருக்கிறது. மேலும் இந்த வழியில் அவர்கள் அவர்களை ஏமாற்றுகிறார்கள். பலவீனமான நம்பிக்கை மேலும் பின்தங்கச் செய்து விடுகிறது. எனவே, இந்த விஷயத்தை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த விஷயத்தில் எந்தளவுக்கு எச்சரிக்கையாக இருந்தார்களென்றால், ஒருவர் முன்னிலையில் மற்றவரின் நம்பிக்கையைப் பற்றி குறிப்பாகப் புகழ்வதைக் கூடத் தடை செய்தார்கள். ஏனெனில், சில நேரங்களில் முகத்திற்கு நேராக ஒருவரைப் புகழ்வது அந்த நபருக்கு நஷ்டத்தை ஏற்படுத்துவது மட்டுமின்றி, ஒருவித ஒப்பீட்டின் காரணமாகச் சில நேரங்களில் அது மற்றவரின் நம்பிக்கை அல்லது அணுகுமுறையின் மீதான தாக்குதலாகவும் அமைகிறது. அவர்கள் ஒரே ஒரு நிகழ்வில் நான்கு பாடங்களைக் கற்றுக் கொடுத்துள்ளார்கள்.

ஷாஃ ஸாஹிப் எழுதுகின்றார்கள், அந்த நான்கு பாடங்கள் இவைதான்: இஸ்லாத்திற்கும், ஈமானிற்கும் உள்ள வித்தியாசம், அதாவது இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதற்கும், ஈமான் கொள்வதற்கும் இடையே உள்ள வித்தியாசம் என்னவென்றால், ஒன்று வெளிப்புற விஷயமாகும்; மற்றொன்று உள்ளம் சார்ந்த விஷயமாகும்.

இரண்டாவது விஷயம், வார்த்தைகளை சரியான இடத்தில் பயன்படுத்துவது, அதாவது எந்த சந்தர்ப்பத்தில் எந்த வார்த்தையை எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதாகும்.

மூன்றாவது விஷயம், 'முஅல்லஃபத்துல் குலூப்' என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.அதாவது உள்ளங்களை இணக்கமாக்குவதைக் கணக்கிட்டு, யாரால்? யாருக்கு என்ன நன்மை கிடைக்கிறது? என்று பார்ப்பதாகும்.

நான்காவது விஷயம், யோசிக்காமல் சிந்தித்துப் பார்க்காமல் ஒருவரைப் புகழ்ந்து, அது மற்றவர்களின் நம்பிக்கை அல்லது அணுகுமுறையின் மீது தாக்குதலாக அமையக் கூடாது என்பதாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்வும் ஞானம் மற்றும் சீர்திருத்தத்தின் கருவூலமாகும். (ஸஹீஹ் புஹாரி மொழிபெயர்ப்பு, தொகுதி 1, பக்கம் 70, நஷ்ர் வ- இஷாஅத் வெளியீடு)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நற்பண்புகளை எடுத்துரைத்தவாறு கூறினார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் மிகச்சிறந்த அளவிலான சமநிலை காணப்பட்டது. மேலும் ஒவ்வொரு நற்பண்பும் அதனதன் சரியான இடத்திலும், சந்தர்ப்பத்திலும் வெளிப்பட்டது.அந்த மேன்மையான பண்புகளில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தாராள மனப்பான்மையும் சரியான இடத்திலும் சந்தர்ப்பத்திலும் இருந்தது. தியாகமும் சரியான இடத்திலும், சந்தர்ப்பத்திலும் இருந்தது, மேலும் கருணையும் சரியான இடத்திலும், சந்தர்ப்பத்திலும் இருந்தது. (பராஹீனே அஹ்மதிய்யா பகுதி 3, ரூஹானி கஸாயின் தொகுதி 01, பக்கம் 194, 195 -லிருந்து எடுக்கப்பட்டது)

அன்னாருடைய கொடை மற்றும் தாராள குணத்தின் எண்ணற்ற நிகழ்வுகள் உள்ளன. இவற்றிலேயே அன்னாருடைய நற்பண்புகளின் மற்ற அம்சங்களும் தென்படுகின்றன.

எவ்வாறிருப்பினும், அன்னாருடைய போதனை எவ்வாறு சீரானதாக உள்ளதோ, அதேபோல் அன்னாருடைய ஒவ்வொரு செயலும் அதற்கு ஏற்ப சீரானதாகவே இருந்தது.

அல்லாஹ் தஆலா நமக்கும் அன்னாருடைய நற்பண்புகளின் ஒவ்வோர் அம்சத்தைப் பற்றி சிந்திப்பதற்கும், அதன்படி செயல்படுவதற்கும் நற்பேறு வழங்குவானாக!

அன்னாருடைய முன்மாதிரியைப் பின்பற்ற முயற்சி செய்தவாறு, நமது வாழ்க்கையை அல்லாஹ் தஆலாவின் விருப்பத்திற்கு ஏற்ப நடத்துபவர்களாக நாம் இருப்போமாக!

(அல்-ஃபஸ்ல் இன்டர்நேஷனல் 10 ஜூலை 2026, பக்கம் 2 - 8)

தமிழாக்கம்
முரப்பி
A.அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * * * *

**ஸீரத்துல் மஹ்தி**

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்கள்**

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்: ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

கண்ணியத்திற்குரிய எனது தாயார் ஸாஹிபா அவர்கள் என்னிடம் கூறினார்கள்:

ஹஸ்ரத் மிர்ஸா ஃபஸ்ல் அஹ்மதுடைய மறைவுக்குச் சிறிது காலம் கழித்து, ஹஸ்ரத் (அலை) அவர்கள் என்னிடம் கூறினார்கள்: 'உம்முடைய பிள்ளைகளுடன் சொத்தில் பங்கு பெறக் கூடியவராக ஃபஸ்ல் அஹ்மதும் ஒருவராக இருந்தார். ஆக, பாவம் அவரும் காலமாகிவிட்டார்.

எளியவனாகிய நான் கூறுவது யாதெனில், எங்களின் தந்தை வழிப் பாட்டனாருக்கு இரு மகன்கள் இருந்தனர். ஒருவர் ஹஸ்ரத் ஸாஹிப் அதாவது அன்னாரது பெயர் மிர்ஸா குலாம் அஹ்மதாக இருந்தது. மற்றொருவர் எங்களது பெரிய தந்தையார் அதாவது ஹஸ்ரத் ஸாஹிப் அவர்களின் மூத்த சகோதரரான மிர்ஸா குலாம் காதிர் ஸாஹிப் ஆவார்.எங்களின் பாட்டனார் காதியானின் நிலத்தில் இரு கிராமங்களை உருவாக்கி அவற்றுக்கு தமது இரு மகன்களின் பெயரைச் சூட்டினார்கள். ஆக, ஒன்றுக்க 'காதிராபாத்' என்றும், மற்றொன்றிற்கு 'அஹ்மதாபாத்' என்றும் பெயரிட்டார்கள். அஹ்மதாபாத் பின்னர் ஏதோ ஒரு வகையில் எங்கள் குடும்பத்தின் கையை விட்டுச் சென்றுவிட்டது. எனவே காதிராபாத் மட்டுமே எஞ்சியது. எனவே, காதிராபாத் ஹஸ்ரத் அவர்களின் பிள்ளைகளுக்கு இடையே பங்கிடப்பட்டது. அதிலேயே மிர்ஸா சுல்தான் அஹ்மத் அவர்களின் பங்கும் வந்தது. இறை வல்லமையால், சுமார் நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு, எங்கள் குடும்பத்தின் கரங்களில் இருந்து வெளியேறி அன்னியக் குடும்பத்தின் கைக்குச் சென்றிருந்த அஹ்மதாபாத் மீண்டும் எங்களிடம் வந்து விட்டது. இப்போது அது முழுமையாக எங்கள் மூன்று சகோதரர்களிடம்தான் உள்ளது. அதாவது மிர்ஸா சுல்தான் அஹ்மது ஸாஹிபிற்கு எதில் பங்கு இல்லை. மேலும் இந்த எளியவன் கூறுவது என்னவென்றால், காதிராபாத் காதியானின் கிழக்குப் பகுதியிலும், அஹ்மதாபாத் வடக்குப் பகுதியிலும் அமைந்துள்ளது.

(ஸீரத்துல் மஹ்தி, பாகம் 1, பக்கம் 20- காதியான் பதிப்பு)

* * * * * * * * * * *

**ஸீரத்துல் காத்தமுன் நபிய்யீ (ஸல்) அவர்கள்**

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்கள்**

## அரேபியர்களின் கல்வி மற்றும் பண்டைய கவிதை

அரேபியாவில் சிறிது கல்வியறிவு இருந்தது. எனினும் மிகக் குறைவாகவே இருந்தது. சில குறிப்பிட்ட நபர்களைத் தவிர, ஒட்டுமொத்த நாடும் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாகவே இருந்தது. அந்தச் சில கல்வியாளர்களும் பெரும்பாலும் நகரங்களிலேயே வசித்து வந்தனர். இருப்பினும், இந்த அறியாமைக்கு மத்தியிலும், அரேபியர்களுக்கு தங்களுடைய மொழியில் இருந்த சொற்செறிவு மற்றும் மொழிப்புலமையின் மீது மிகுந்த பெருமை இருந்தது. அதாவது, அரேபியர்கள் தங்களைத் தவிர மற்ற உலகத்தை 'அஜமி என்று கூறிவந்தனர். அதாவது ஊமையர் என்று அழைத்தனர். மொழியின் சொற்புலமையில் அரேபியர்கள் உண்மையிலேயே உச்சக்கட்ட திறனைப் பெற்றிருந்தனர் என்பதில் சந்தேகமில்லை. அறியாமைக் காலத்து கவிஞர்களின் படைப்புகள் இன்றும் பாதுகாப்பாக இருக்கின்றன. அவற்றில் காணப்படும் சொற்புலமை மற்றும் பாண்டித்தியம், வீரம், உற்சாகம், சுதந்திரமான வாழ்க்கையின் பிரதிபலிப்பு மற்றும் இயற்கையான ஓட்டம் ஆகியவை வேறு எந்த சமுதாயம் அல்லது வேறு எந்தக் காலத்து கவிதைகளிலும் அரிதாகவே கிடைக்கும். அந்த மக்களிடம் ஒரு சிறப்பம்சம் இருந்தது. அது என்னவென்றால், அவர்கள் தங்கள் உள்ளத்து உணர்வுகளை எந்தவிதத் தயக்கமும் இன்றி, அப்படியே தங்கள் மொழியில் கூறிவிடுவார்கள்; எந்தவிதமான செயற்கைத்தனமும், பாவனையும் அல்லது மனதின் மீது எந்த வற்புறுத்தலும் இருக்காது. இதனாலேயே, அவர்களின் கவிதைகள் அவர்களின் எண்ணங்கள், உணர்வுகள் மற்றும் பழக்கவழக்கங்களை முழுமையாகப் பிரதிபலிக்கின்றன.

அரேபிய சமூகம் தனது இந்தத் தகுதியை நன்றாக உணர்ந்திருந்தது. எனவே, ஒரு வரலாற்றாசிரியர் எழுதியுள்ளார்: அறியாமைக் காலத்தின் அரேபியர்கள் ஒருவருக்கு ஒருவர் மூன்று சந்தர்ப்பங்களில் மட்டுமே வாழ்த்துத் தெரிவிப்பார்கள். முதலாவது, ஒருவருக்கு ஆண் குழந்தை பிறந்தால். இரண்டாவது, ஒரு கவிஞர் உருவானால். மூன்றாவது, சிறந்த செம்மறி ஆடு பிறந்தால். இந்தச் சிறிய வாக்கியத்தில் அரேபிய வாழ்க்கையின் முழு வரைபடமும் வந்து விடுகிறது.

அரேபியாவில் கவிஞர்கள் நாட்டின் தலைவர்களாகக் கருதப்பட்டனர். தங்கள் கவிதையின் வலிமையால் இரண்டு பழங்குடியினருக்கு இடையே போரைத் தூண்டி நாட்டில் தீ மூட்டும் ஆற்றல் அவர்களிடம் இருந்தது. அரேபியாவின் முக்கியமான இடங்களில் கவிஞர்கள் கூடித் தங்கள் திறமையை வெளிப்படுத்துவார்கள். 'உகாழ்' என்பது மக்காவிற்கும், தாயிஃபிற்கும் இடையே மக்காவிலிருந்து கிழக்கே அமைந்துள்ள ஒரு பசுமையான இடமாகும்; இத்தகைய கண்காட்சிகளுக்கு அறியாமைக் காலத்திலேயே இது சிறப்புப் பெற்றிருந்தது. இங்கு ஒவ்வொரு ஆண்டும் துல்கஃதா மாதத்தில் கண்காட்சி நடைபெறும். தூரத்திலிருந்தும் மக்கள் திரள்வார்கள். மற்ற விஷயங்களைத் தவிர, பல்வேறு அரபுப் பழங்குடியினருக்கு இடையே சொற்பொழிவு மற்றும் மொழிப் புலமைப் போட்டிகளும் நடைபெறும்.

மக்கா வெற்றிக்குப் பிறகு, அரேபியாவின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் பல்வேறு பழங்குடியினரின் தூதுக்குழுக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சந்திக்க வந்தபோது, அவர்களில் பனூ தமீம் பழங்குடியினர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) முன்னிலையில் முன்வைத்த உண்மையின் அளவுகோல், அரேபியாவில் கவிதையின் அந்தஸ்தை உணர்த்துகிறது. அவர்கள் மற்ற ஆதாரங்களில் ஈடுபடுவதற்குப் பதிலாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், நாங்கள் வந்ததற்குக் காரணம், உங்களின் கவிஞருக்கும் எங்களுடைய கவிஞருக்கும் இடையே போட்டியிட்டுப் பார்க்கவே' என்று கூறினர். எனவே, அவர்கள் தங்கள் கவிஞரை முன் நிறுத்தினர். அவர் தனது பழங்குடியினரைப் புகழ்ந்து சில கவிதைகளைப் பாடினார். பின்னர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்லிம்கள் சார்பாக ஹஸ்ஸான் பின் ஸாபித் அல்-அன்ஸாரியை எழுந்து நிற்கக் கட்டளையிட்டார்கள். **(தொடரும்......)**

(நூல் ஸீரத் காத்தமுன் நபிய்யீன், பக்கம் 53)

* * * * * * * * * * * *

திருக்குர்ஆனிலிருந்து...

**அல்லாஹ்வின் நினைவிலேயே உள்ளங்கள் அமைதி அடைகின்றன (13:29)**

A. Khaleel Ahmad
( Melapalayam)

**12-ம் பக்கத் தொடர்ச்சி .....(ஹுஸூர் அன்வர் அவர்களின் சுற்றுப் பயணம்)**

ஜமாஅத்தைப் பற்றிய அறிமுகம் மேலும் அதிகரிக்கும். எந்த நற்செயலால் நன்மை பரவி, இஸ்லாத்தின் அழகு வெளிப்படுமோ அதை விளம்பரப்படுத்துவது அவசியமாகும்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இஷாஅத் துறைக்கு வழிகாட்டியவாறு கூறினார்கள்: புத்தகங்களின் விலைகளை குறைவாக வையுங்கள்; மேலும் குறைந்த லாபம் ஈட்டுங்கள். இதன் மூலம் உங்கள் புத்தகங்கள் அதிக எண்ணிக்கையில் விற்பனையாகும்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள் : துவக்க காலத்தில் ரப்வாவின் கடைக்காரர்களுக்குக் குறைந்த லாபம் ஈட்டுமாறு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் வழிகாட்டியிருந்தார்கள். இதனால் ஒன்று, உங்கள் பொருட்கள் அதிகளவில் விற்பனையாகும்; மேலும் வருமானமும் அதிகரிக்கும்; இரண்டாவதாக, வெளியில் இருந்து பொருட்களும், சாமான்கள் போன்றவை ரப்வாவிற்கு வந்து கொண்டிருக்கும்.ஆனால், தற்போது அதிக லாபம் ஈட்டத் துவங்கியுள்ளனர்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: நஷ்ரோ இஷாஅத் துறையின் வேலை பணம் சம்பாதிப்பது அல்ல; மாறாக, அவர்களின் முன்னேற்றமும், வெற்றியும் என்னவென்றால், இவ்வளவு நூல்களை நாங்கள் விற்றுள்ளோம்; மேலும், இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் மக்கள் புத்தகங்களை வாங்கியுள்ளனர் என்பதாகும்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: திருக்குர்ஆன் விற்பனையும் அதிகரிக்க வேண்டும். அங்கு லண்டனிலிருந்து உங்களுக்கு திருக்குர்ஆன் வந்து சேர்ந்த பிறகு விலை அதிகமாக இருக்குமென்றால், பின்னர் எனக்கு முழு விவரங்களையும் எழுதி அனுப்புங்கள்; அப்போது அது தொடர்பாக நான் வழிகாட்டல் வழங்குவேன்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் எழுதிய Revelation புத்தகத்தை உங்கள் ஸ்டாக்கில் இருந்து எடுத்து அதனை விநியோகம் செய்யுங்கள்; இதன் காகிதம் பாழாகி வருகிறது என்று நான் ஏற்கனவே வழிகாட்டல் வழங்கியுள்ளேன்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: காதியானிலிருந்து வெளியாகும் புதிய புத்தகங்கள் எவையோ, அவை உடனுக்குடன் இங்கு வரவழைக்கப்படுகின்றன. அன்வாருல் உலூம் புத்தகத்தின் புதிய பாகங்கள் எவை வெளியாகியுள்ளனவோ, அவையெல்லாம் வரவழைக்கப்பட வேண்டும்.

புத்தகங்களின் மொழிபெயர்ப்புகள் குறித்து வழிகாட்டல் வழங்கியவாறு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இங்கு மொழிபெயர்ப்புப் பணியைச் செய்யக் கூடிய உங்களுடைய ஒரு குழுவை உருவாக்குங்கள். அவர்களுக்கு ஆங்கில மொழியில் சிறந்த புலமை இருக்க வேண்டும்; அத்துடன் உருதுவும் அறிந்திருக்க வேண்டும். அல்லது உருது தெரிந்த ஒரு பெரியவரையும் அவருடன் இணையுங்கள். பின்னர் இணைந்து அவர்கள் மொழிபெயர்க்கட்டும்!

துண்டுப் பிரசுரங்கள் தயாரிப்புக் குறித்து வழிகாட்டி ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

இன்றைய நாட்களில் உலகிற்கு மார்க்கத்தில் ஆர்வம் இல்லை. எவருக்கு இறைவன் மீது நம்பிக்கையில்லையோ அவருக்கு மார்க்கத்துடன் என்ன தொடர்பு இருக்கும்? எனவே முதலில் அத்தகைய நபர்களை இறைவன் மீது நம்பிக்கை கொள்ளச் செய்வது அவசியமாகும். மார்க்கத்தால் குழப்பமும், கலகமும் பரவுகிறது என்பது மக்களின் எண்ணங்களில் உள்ளது. எனவே, மக்களின் மனங்கள் தூய்மையாகும் வகையில் துண்டுப் பிரசுரங்களை உருவாக்க வேண்டும்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

துண்டுப் பிரசுரங்கள் தயாரிப்பதற்கு முன் திட்டமிடுங்கள்; ஒரு சர்வே நடத்துங்கள்; மக்களுக்கு எதில் ஆர்வம் உள்ளது? என்பதை அறிந்துகொள்ளுங்கள்! ஏதாவது ஒரு பகுதியைத் தேர்ந்தெடுத்து, அங்கு கடவுளை நம்பாத எத்தனை நாத்திகர்கள் உள்ளனர்? மேலும், எத்தனை சதவீதம் பேர் மார்க்கத்தை விரும்புகிறார்கள்? கிறிஸ்துவத்தில் ஆர்வம் கொண்டவர்கள் எத்தனை பேர்? இஸ்லாத்திற்கு எதிரானவர்கள் எத்தனை பேர்? இஸ்லாத்தை பயங்கரவாத மதம் என்று கருதுபவர்கள் எத்தனை பேர்? என்று ஆய்வு செய்யுங்கள். முதலில் இந்த அனைத்து ஆராய்ச்சியையும் செய்யுங்கள்: முதலில் மக்களின் மனநிலையைப் புரிந்து கொள்ளுங்கள்! அதன் பிறகு, அவர்களின் தேவைக்கும், மனநிலைக்கும் ஏற்ப துண்டுப் பிரசுரங்களைத் தயாரித்து வெளியிடுங்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

குத்தாம் மற்றும் லஜ்னா அமைப்புகள் தனித்தனியாக குழுக்களை உருவாக்க வேண்டும். அஹ்மதிய்யத்திற்கு எதிராக பல்வேறு வலைத்தளங்கள் உள்ளன. அந்த வலைதளங்களை இந்த இணைய தளக் குழுக்கள் சரியான போதனைகளால் நிரப்பி விட வேண்டும். இணையதளங்களில் ஒருவர் சென்றால், எங்கு அவருக்கு அஹ்மதிய்யத்திற்கு எதிரான கருத்துகள் தென்படுமோ, அங்கேயே அஹ்மதிய்யத்தின் அதாவது உண்மையான இஸ்லாத்தின் உண்மையான போதனைகளும் அவருக்கு தென்பட வேண்டும். அங்கேயே எதிர்மறையான பிரச்சாரத்திற்கான பதிலும் கிடைக்க வேண்டும். **(தொடரும்.........)**

தமிழாக்கம்
முரப்பி
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * * * * *

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2026-2028 Vol. 11 THU 06 AUG 2026 Issue No. 32

ACT. MANAGER
_ATHAR AHMAD SHAMIM
Mobile : +91 9815639670
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்களின் ஆஸ்திரேலிய சுற்றுப் பயணம் - 2013

### மஜ்லிஸே ஆமிலா உறுப்பினர்களுடன் சந்திப்பு

(அறிக்கை அப்துல் மஜீத் ஸாஹிப் தாஹிர்)

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: யூ.கே-வில் ஒரு வினாடி வினா படிவம் தயார் செய்யப்பட்டு இளைஞர்கள் மற்றும், பெண் பிள்ளைகளிடம் கொடுக்கப்பட்டது. அதில் தனது பெயரை எழுதாமல் படிவத்தை பூர்த்தி செய்தும், கேள்விகளுக்கான பதில்களை எழுதியும் அனுப்புமாறு கூறப்பட்டிருந்தது. இவ்வாறு ஒரு கருத்தாய்வு (survey) செய்யப்பட்டது. கேள்விகள் எத்தகையதாக இருந்தன என்றால், எத்தகைய உறவுகள் இருக்க வேண்டும்? கணவர்மார்களிடம் என்ன எதிர்பார்ப்புகள் இருக்கின்றன? அதேபோல் மனைவியிடம் என்ன எதிர்பார்ப்புகள் உள்ளன? சூழ்நிலையின் தாக்கம் கணவர்மார்கள் மீது எப்படி ஏற்படுகிறது? மேலும் பெண் பிள்ளைகள் மீது எப்படி இருக்கிறது? இருவரின் தாய், தந்தையர் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? பெற்றோர் எவ்வாறு உறவில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றார்கள்? போன்றவை...

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: அந்த சர்வேயின் முடிவில் கிடைத்த பதில்களில் இருந்து எனக்கு ஏராளமான தகவல்கள் கிடைத்தன. இரண்டு மூன்று ஜல்ஸாக்கள் மற்றும் கூட்டங்களில் எனது உரைக்கான தலைப்பை தேர்ந்தெடுப்பது எனக்கு எளிதாகிவிட்டது. எனவே நான் அந்த அனைத்துப் பிரச்சனைகளையும் குறிப்பிட்டு அவற்றுக்கான தீர்வுகளையும் எடுத்துரைத்து விட்டேன்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இந்தத் தகவல்கள் எனக்கு ஒவ்வோர் இடத்திலிருந்தும் வர வேண்டும்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: சுதந்திரம் என்ற பெயரில் கேள்விகள் எழுகின்றன. அவர்களைக் கண்டிப்புடன் அடக்கும்போது, அதனால் பிரச்சனை உருவாகிறது. நுட்பமான ஞானம், அன்பு மற்றும் அரவணைப்புடன் இஸ்லாத்தின் போதனைகளை எடுத்துரைத்து அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: மெல்பர்னிலிருந்து என்னைச் சந்திக்க ஒரு குடும்பம் வந்திருந்தது. ஜமாஅத் நிகழ்ச்சிகளில் கணவர் வருவதில்லை; மனைவியும் குழந்தைகளும் வருகின்றனர் என்பது தெரிய வந்தது. அவரின் முகத்தைப் பார்த்ததும், 'ஏதேனும் பொறுப்பாளர் மூலமாக உனக்குக் கஷ்டம் ஏதும் நேர்ந்ததா?' என்று கேட்டேன். அவர் அழத் தொடங்கினார்;மேலும், உணர்ச்சிவயப்பட்டார். நான் அவருக்குப் புரிய வைத்தேன்.

எனினும், பொறுப்பாளர்களின் நடத்தைகள் சிறப்பாக இருக்க வேண்டும். உங்களுக்கு கீழ் பணிபுரியும் பொறுப்பாளர்களைப் பிடியுங்கள். அவர்களின் நடத்தையின் காரணமாக சிலர் பின்வாங்கி விடுகின்றனர். உங்களின் சுய அகந்தையையும், பகைமைகளையும் அழித்து விடுங்கள். அல்லாஹ் உங்களுக்குச் சேவை செய்ய வாய்ப்பளித்துக் கொண்டிருக்கின்றான். இதனை ஓர் இறையருளாகக் கருதுங்கள்.

மஜ்லிஸே ஷூரா மற்றும் ஜமாஅத் தேர்தல்களுக்கு முன் நான் ஜுமுஆ குத்பா நிகழ்த்தியிருந்தேன். அதனை அனைத்துப் பொறுப்பாளர்களுமே கேளுங்கள். யூ.கே ஷூராவின்போது நான் வழங்கிய உரையையும் அனைத்து பொறுப்பாளர்களும் கேளுங்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: சவ்த்ரி ஸுஹுர் பாஜ்வா ஸாஹிப் அவர்கள் என்னிடம் இவ்வாறு கூறினார்கள்: 'ஹஸ்ரத் மிர்ஸா ஷரீஃப் அஹ்மத் ஸாஹிப் அவர்கள் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாதாக இருந்தார்கள். அப்போது, மர்ஹூம் சவ்த்ரி ஸுஹுர் அஹ்மது பாஜ்வா ஸாஹிப் அவர்கள் துணை நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாதாக நியமிக்கப்பட்டார்கள். அப்போது, 'நீங்கள் துணை நாஸிராக நியமிக்கப்பட்டுள்ளீர்கள்; ஒருவரை அஹ்மதிய்யத்தில் இணைப்பது மிகவும் கடினமான பணியாகும்; ஆனால் விரட்டுவது மிகவும் எளிதான வேலையாகும் என்பதை எப்போதும் .நினைவில் கொள்ளுங்கள் என்று கூறி அன்னாருக்கு ஹஸ்ரத் மிர்ஸா ஷரீஃப் அஹ்மது ஸாஹிப் அவர்கள் புரிய வைத்தார்கள்.

எனவே பொறுப்பாளர்கள் தங்கள் நடத்தையை மாற்றிக் கொள்ள வேண்டும், எல்லாரிடமும் அன்புடனும், நேசத்துடனும் நடந்து கொள்ள வேண்டும்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: அனைத்து ஜமாஅத்துகளின் செயலாளர்களுக்கும் பயிற்சியளிக்கும் வகையில் அவர்களுக்கான புத்துணர்வுப் பயிற்சி வகுப்புகளை நடத்துங்கள். இதனால் அவர்களுக்குப் பயிற்சி அளிக்க முடியும். எவ்வாறு வேலை செய்ய வேண்டும்? மேலும், ஒவ்வொருவரையும் எவ்வாறு அரவணைத்துச் செல்ல வேண்டும்? எவ்வாறு நுட்பமான ஞானத்துடன் தர்பிய்யத் வழங்கி தம்முடன் இணைக்க வேண்டும்? மேலும் எவர்கள் பின்தங்கி விட்டார்களோ அவர்களை எவ்வாறு அருகில் கொண்டு வர வேண்டும்? போன்றவை அவர்களுக்குத் தெரியவரும்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: சந்திப்புகளின் போது ஐந்து வழக்குகள் என் முன் வந்து விட்டன. ஹுஸூர் அன்வர் கூறினார்கள்: ஒருவருடைய ஏதாவது ஒரு விவகாரம் இருந்தால் அவரை இழிவுபடுத்துவதற்கு எவருக்கும் உரிமை கிடையாது. அது உண்மையாகவே இருந்தாலும் அப்போதும் அவரை அவமானப்படுத்தக் கூடாது; திரையிட வேண்டும்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: மனிதம் முதலில் அமைப்பு ஜமாஅத் அமைப்பின் மீது அதிக தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது எனத் தோன்றுகிறது. குத்தாம் மற்றும் அன்ஸார் கிளை அமைப்புகள் தத்தமது சேரிட்டி வாக் நிகழ்ச்சியை நடத்த வேண்டும்; மேலும் அவர்கள் தமது சொந்த பெயரையே பயன்படுத்த வேண்டும். அவர்களின் சொந்த அடையாளம் வெளிப்பட வேண்டும். மற்றபடி நிதிப் பகிர்ந்தளிக்கப்படும் போது, அதிலிருந்து மனிதம் முதலில் அமைப்பிற்கும் நிச்சயமாக கொடுங்கள்; அதேபோன்று, பிற உள்ளூர் தொண்டு நிறுவனங்களுக்கும் வழங்குங்கள். காசோலைகள் வழங்கும் நிகழ்வை ஒருங்கிணைக்கும்போது, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களையும் அழையுங்கள்; இதன் மூலம் ஜமாஅத்தைப் பற்றிய அறிமுகம் பிறருக்குக் கிடைக்கும். மேலும், இனம், நிறம், மதம் போன்ற எந்த பாகுபாடும் இன்றி ஒவ்வொருவரின் நலனுக்காகவும் போதனை வழங்குகின்ற மற்றும் ஒவ்வொருவருக்கும் உதவி செய்கின்ற எவ்வளவு அழகான மார்க்கம் இஸ்லாம் ஆகும்! என்று மற்றவர்களுக்கு தெரியவரும்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இந்த அமைப்பில் பல்வேறு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைக்கவும். சேரிட்டி வாக் தவிர, ரத்த தானம் மற்றும் மரக் கன்றுகள் நடுதல் போன்ற நிகழ்ச்சிகளை ஆண்டின் தொடக்கத்தில் கவுன்சில் முதலியவற்றுடன் இணைந்து நடத்தி, அப்பகுதியைச் சுத்தம் செய்யும் திட்டங்களைச் செயல்படுத்தலாம். இது போன்ற நிகழ்ச்சிகளில் ஊடகங்களை பயன்படுத்துங்கள்; மீண்டும், மீண்டும் ஊடகங்களில் வரும்போது

இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம்...

National Watch Company
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
O.A.N. Doors & Steels
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, { opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad